Registered as a Newspaper

விலை ரூபா 7.00

# ஈழநாதம்

EELANATHAM மக்கள் நாளிதழ்

பக்கங்கள் ~ 08

நாதம் 14 | திருவள்ளுவர் ஆண்டு 2034 | வைகாசி - 15 | 29-05-2003 | வியாழக்கிழமை | ஓசை 100

வவுனியா நகரில் தரங் குன்றா தங்க நகைகளுக்கு நம்பிக்கை நாணயம் மிக்க நிறுவனம்

கணேசா நகையகம்

வவுனியா.

(சி-7865)

# புலிகளிடம் பிரதமரின் பிரேரணைகள் நோர்வே அதிகாரிகளினால் கையளிப்பு

## பரிசீலனையின் பின் புலிகள் பதிலளிப்பர்

(அலுவலக செய்தியாளர்)

**வடக்கு-கிழக்கிற்கு இடைக்கால நிர்வாகக் கட்டமைப்புத் தேவை என்ற விடுதலைப்புலிகளின் கோரிக்கை தொடர்பாக சிறிலங்காப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அவர்களின் பிரேரணைகள் அடங்கிய ஆவணங்கள் நேற்று கிளிநொச்சி சமாதான செயலகத்தில் வைத்து நோர்வே தூதரக அதிகாரிகளினால் விடுதலைப்புலிகளிடம் கையளிக்கப்பட்டது.**

இப்பிரேரணைகளை நன்கு ஆராய்ந்த பின்னர் இதற்கான பதிலை விடுதலைப்புலிகளின் தலைமைப்பீடம் சிலதினங்களின் பின் அளிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

நேற்று பகல் 1.30 மணியளவில் கிளிநொச்சி மத்திய விளையாட்டு மைதானத்தில் சிறிலங்கா விமானப் படையின் உலங்குவானூர்தி மூலம் வருகைதந்த நோர்வேத் தூதரக உயர் அதிகாரி லொக்சிட் மற்றும் சிறிலங்காவிற்கான நோர்வேத் தூதரக இரண்டாவது அதிகாரி தோமஸ் ராங்கிலன்ட் ஆகியோர் பிரதமர் ரணில் விக்கிரம சிங்கவின் ஆலோசனைகள் அடங்கிய கடிதத்தினை கிளிநொச்சியில் அமைந்துள்ள புலிகளின் சமாதானச் செயலகத்தில் வைத்து புலிகளின் சமாதா

(08ஆம் பக்கம் பார்க்க)



அரசின் பிரேரணைகள் அடங்கிய ஆவணங்களுடன் நேற்று கிளிநொச்சிக்கு வந்த நோர்வே தூதரக அதிகாரிகளுடன் புலித்தேவன் அவர்கள்.

### டோக்கியோ உதவி வழங்கும் மாநாடு

# கூட்டுத் தலைமைப் பொறுப்பிலிருந்து நோர்வே அரசு விலகிக்கொள்ளலாம்!

(கொழும்பு)

அடுத்த மாதம் ஜப்பான் தலைநகர் டோக்கியோவில் நடைபெறவுள்ள இலங்கைக்கு உதவி வழங்கும் மாநாட்டில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் பங்குபற்றாத பட்சத்தில் அம்மாநாட்டிற்கு கூட்டுத் தலைமை வகிக்கும் பொறுப்பிலிருந்து நோர்வே விலகிக் கொள்ளும் நிலை ஏற்பட்டிருப்பதாக கொழும்பில் இராஜதந்திர வட்டாரங்களிலிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

விடுதலைப் புலிகள் தாம் டோக்கியோ மாநாட்டில் பங்குபற்றுவது இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பு ஒன்றை ஏற்படுத்த வேண்டும் என்ற

(08ஆம் பக்கம் பார்க்க)

# மேஜர் இசைத்தம்பியின் நடுகல் திரை நீக்கம்!

கடந்த 04.12.1996 அன்று மன்னார் ற்றுப் பகுதியில் இராணுவத்தினருடனான மோதலில் வீரச்சாவடைந்த மேஜர் இசைத்தம்பி லூயிமன் கந்தசாமி கிருபாகரன், தோனிக்கல், வவுனியா. எனும் மாவீரனின் திருவுருவப்படம் இன்று அரசியல் துறை செயலகத்தில் வைக்கப்பட்டு பிற்பகல் 2.00 மணியளவில் அங்கிருந்து எடுத்து வரப்பட்டு புதுக்குடியிருப்பு மாவீரர் மண்டபத்தில் மக்களின் இறுதி அஞ்சலிக்காக வைக்கப்பட்டு தொடர்ந்து மாலை 5.00 மணிக்கு முள்ளியவளை மாவீரர்துயிலும் இல்லத்தில் பூரண இராணுவ மரியாதையுடன் நடுகல் திரைநீக்கம் செய்யப்படும்.

# உலக சூழல் நாள் நிகழ்வுகள் தமிழர் தாயகத்தில் கடைப்பிடிப்பு!

### பல்வேறு நிகழ்வுகளுக்கும் ஏற்பாடு

தமிழீழ அரசியல்துறையின் ஏற்பாட்டில் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் ஒழுங்குபடுத்தலில் இன்று முதல் யூன் மாதம் 19ஆம் நாள் வரை உலக சூழல் நாள் நிகழ்வுகள் தமிழீழ மக்களினால் கடைப்பிடிக்கப்படுகின்றன. இன்று முதல் யூன் மாதம் நான்காம் நாள் வரை சூழல் விழிப்புணர்வு நாட்களாகவும், யூன் 5ஆம் நாள் தொடக்கம் யூன் 19 ஆம் நாள் வரை சூழல் வார நாட்களாகவும் கடைப்பிடிக்கப்படுகின்றது.

சூழல் விழிப்புணர்வு மற்றும் சூழல் வார நாட்களில் பாடசாலை மாணவர்களுக்கிடையே இலக்கியப் போட்டிகள் மற்றும் ஆய்வரங்குகள்

(08ஆம் பக்கம் பார்க்க)

# எரிக்-சொக்லண்ட் சந்தித்துப் பேச்சு!

(கொழும்பு)

சிறிலங்காவில் தங்கியுள்ள நோர்வேயின் விசேட பிரதிநிதி எரிக் சொல் ஹெய்ம் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் பிரதித் தலைவர் சொக்லண்டைச் சந்தித்து உரையாடியுள்ளார்.

போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு எதிர்நோக்கும் பிரச்சினைகள் மற்றும் விடுதலைப்புலிகளின் கடல் போக்குவரத்து தொடர்பாக முன் வைத்திருக்கும் யோசனைகள் பற்றி ஆராயப்பட்டுள்ளன.

(08ஆம் பக்கம் பார்க்க)

# முரண்பாட்டைத் தீர்க்க நெகிழ்ச்சிப் போக்கை அரசும்-புலிகளும் கடைப்பிடிக்க வேண்டும்

### ஐரோப்பிய யூனியன் கோரிக்கை

சமாதான முயற்சியில் தற்போது ஏற்பட்டிருக்கும் பிரச்சினைக்கு தீர்வுகாணும் வகையில் சிறிலங்கா அரசும் விடுதலைப் புலிகளும் நெகிழ்ச்சிப்போக்கை கடைப்பிடிக்கும்படி ஐரோப்பிய ஒன்றியத்தின் தலைமை கேட்டுள்ளது.

ஐரோப்பிய ஒன்றியத்தின் பிரதிநிதியாகச் செயற்படும் இலங்கைக்கான இத்தாலிய தூதர் இது தொடர்பான அறிக்கை ஒன்றை நேற்று வெளியிட்டுள்ளார். அந்த அறிக்கையில் டோக்கியோ மாநாட்டிலும் பேச்சுவார்த்தைகளிலும் விடுதலைப் புலிகள் கலந்துகொள்ளாதமை குறித்து ஐரோப்பிய ஒன்றியத்தின் தலைமை தமது கரிசனையை வெளிப்படுத்துவதாகவும் விடுதலைப் புலிகளுக்கும் சிறிலங்கா அரசுக்குமிடையே நடந்துவரும் கலந்துரையாடல்களை ஐரோப்பிய ஒன்றியம் உன்னிப்பாக அவதானித்து வருவதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

டோக்கியோ மாநாட்டில் பங்குபெறும் வகையில் நெகிழ்ச்சித் தன்மையை இரு தரப்பினரும் கடைப்

(08ஆம் பக்கம் பார்க்க)

# அமெ. தூதரக அதிகாரிகள் இருவர் நேற்று யாழ். விஜயம்

### பலதரப்பினருடனும் சந்தித்துப் பேச்சு

(யாழ்ப்பாணம்)

சிறிலங்காவிற்கான அமெரிக்கத் தூதரகத்தைச் சேர்ந்த இரு அதிகாரிகள் நேற்று யாழ்ப்பாணத்திற்கான பயணமொன்றை மேற்கொண்டுள்ளனர். அமெரிக்கத் தூதரக அதிகாரியான கிறிஸ்லோஸ் மற்றும் பத்மினி இராஜதுரை ஆகியோரே யாழ்ப்பாணத்திற்குச் சென்றுள்ளனர்.

இவ்விஜயத்தின் போது அமெரிக்கத்தரப்பு அதிகாரி யாழ். குடாநாட்டின் அரசியல் நிலவரம் மீள்குடியேற்றம் அதியுயர் பாதுகாப்பு வல

(08ஆம் பக்கம் பார்க்க)

கண்ணென்ப சூழல்
கருத்தென்ப பேணல்

### வடக்கு - கிழக்கு அபிவிருத்தியை உற்சாகப்படுத்துவதற்காக

# அபிவிருத்தி அமைப்பின் அவசியம்பற்றி அரசாங்கம் கவனம் செலுத்துகிறது

### அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ்

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு அபிவிருத்தி நடவடிக்கைகளை உற்சாகப்படுத்துவதற்கு அபிவிருத்தி அமைப்பு ஒன்றின் அவசியம் பற்றி கவனம் செலுத்தி வருவதாக அரசு அறிவித்துள்ளது.

மீள் குடியமர்வு, புனர்நிர்மாணம், வீதி அபிவிருத்தி, சுகாதாரம் ஆகியதுறைகள் இதில் அடங்கியுள்ளன. இந்த யோசனைகள் அடங்கிய கடிதம் ஒன்று நோர்வேப் பிரதிநிதிகள் ஊடாக தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கு அனுப்பப்பட்டுள்ளதாக அமைச்சரவை தீர்மானங்கள் பற்றி அறிவிக்கும் பொருட்டு நேற்று கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் அமை

(08ஆம் பக்கம் பார்க்க)

வரி விளம்பரம்

**விவசாயிகளே!**

உங்கள் வீட்டுத்தோட்டத்தை வளமாக்கத்தேவையான தென்னை, பலா, மாதுளை, எலுமிச்சை (தேசி), கமுகு, கொய்யா, கொடித் தோடை, தோடை, சவுக்கு மற்றும்பல தரமான நல்லின நாற்றுக்களைக் குறைந்த விலையில் நீங்கள் பெறுவதற்கு இன்றே நாடுங்கள். ஒருங்கிணைந்த மாதிரிப் பண்ணை, வட்டக்கச்சி. (3275)


### தவறிவிட்டது

பேரம்பலம் பகீரதி என்பவருடைய தேசிய அடையாள அட்டையும், முக்கிய ஆவணங்களுடன் அடங்கிய கை பேர்ஸ் 27.05.2003 அன்று புளியங்குளம் பகுதியில் தொலைந்துவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் ஒப்படைக்குமாறு மிகவும் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றேன். (3294)

ஒட்டுசுட்டான் பிரதேசத்தில்

# கர்ப்பிணிப் பெண்களுக்கான போசாக்குப் பயிற்சி வகுப்புக்கள்

உலக உணவுத் திட்டத்தின் அனுசரனையுடன் ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவின் ஆதரவில் தாய்மாருக்கும், கர்ப்பிணிப் பெண்களுக்கும், யுவதிகளுக்கும் போசாக்குப் பற்றி பயிற்சி வகுப்புக்கள் முல்லை அகதிகள் புனர்வாழ்வுக் கழக ஒன்று கூடல் மண்டபத்தில் நடைபெறுகின்றது.

கடந்த திங்கட்கிழமை 2.30 மணியளவில் ஆரம்ப நிகழ்வு ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் திருமதி ந.செல்வராசா தலைமையில் நடைபெற்றது.

போசாக்கு கல்வி பற்றி திருமதி ம.கி.வில்வராஜா கருத்துரை வழங்கினார்.

கருத்துரைகளை பிரதேசப் பொறுப்பாளர் லோ.சின்னக்கிளி, கற்சிலைமடு கிராம சேவகர் ஆனந்தராஜ் ஆகியோர் வழங்கியதைத் தொடர்ந்து போசாக்கு கருத்திட்ட பயிற்சியினை திருமதி ம.கி.வில்வராசா, சிரேஸ்ட பொது சுகாதார வைத்திய அதிகாரி கே.ஜெகதீஸ்வரன் ஆகியோர் வழங்கினர்.

இப்பயிற்சி நெறி 26,27,28 ஆகிய மூன்று தினங்கள் நடைபெற ஏற்பாடாகியிருக்கிறது.

இதேவேளை இப் பயிற்சியானது கரைதுறைப்பற்று பிரதேசத்தில் இரண்டும், புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் இரண்டும் நடைபெற்றுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (05)

# கரைச்சிப் பிரதேச செயலர் பிரிவில் 11,734 குடும்பங்கள் மீளக்குடியமர்வு!

(அலுவலக செய்தியாளர்)

கரைச்சிப் பிரதேச செயலர் பிரிவில் 11,734 குடும்பங்கள் மீளக் குடியமர்ந்துள்ளன.

சத்ஜெய இராணுவ நடவடிக்கை மூலம் கரைச்சிப் பிரதேச செயலர் பிரிவில் இருந்து 16,324 குடும்பங்கள் இடம்பெயர்ந்து வன்னியின் பல பாகங்களிலும் குடியேறியிருந்த நிலையில் ஓயாத அலைகள் இராணுவ நடவடிக்கை மூலம் கிளிநொச்சி நகர் மீட்கப்பட்டதன் பின் 11,734 குடும்பங்கள் மீளக் குடியமர்ந்துள்ளனர் என்றும் 5,152 குடும்பங்களுக்கு மீளக் குடியேற்றத்திற்கான கொடுப்பனவுகள் வழங்கப்பட்டுள்ளதாகவும் கரைச்சிப் பிரதேச செயலர் பொன்.நித்தியானந்தன் தெரிவித்துள்ளார். (பா)

2002/03 ஆம் ஆண்டிற்கான

# மகாபொல பரிசில்கள் பெறும் கிளி. மாவட்ட மாணவர் விபரம்!

(அலுவலக செய்தியாளர்)

2002/2003 ஆம் ஆண்டிற்கான மகாபொல புலமைப்பரிசில் கிளிநொச்சி மாவட்ட கீழ்க்குறிப்பிடப்பட்ட பெயர்களையுடைய மாணவர்களுக்கு வழங்கப்படவுள்ளது.

எதிர்வரும் 31ஆம் திகதி காலை 10.00 மணிக்கு கிளி.மாவட்ட அரச செயலகத்தில் வைத்து கிளி.அரச அதிபர் தி.இராசநாயகம் அவர்களினால் மேற்படி புலமைப்பரிசில் வழங்கப்படவுள்ளது.

எனவே சம்பந்தப்பட்ட மாணவர்கள் தங்களது தேசிய அடையாள அட்டையுடனும், பல்கலைக் கழக பதிவு அட்டையுடனும், அன்றைய தினம் தவறாது சமுகமளிக்கும்வண்ணம் கிளி.மாவட்ட மேலதிக அரச அதிபர் நா.வேதநாயகன் வேண்டியுள்ளார்.

செல்வி எஸ்.றொஜித்தா 8ஆம் வாய்க்கால், உருத்திரபுரம், செல்வி கே. அனித்தா அக்கராயன், பி.ரூபசிங்கம் திருநகர், செல்வி எஸ்.துயித்தா 8ஆம் வாய்க்கால், உருத்திரபுரம், பி.முகுந்தன் கந்தபுரம், செல்வி எஸ்.ஜெயசீலி மட்டுவில்நாடு மேற்கு, செல்வி கே.ஜெயக்காந்தன் விசுவமடு, கே.துசிதன் உதயநகர் கிழக்கு, செல்வி கீதா அக்கராயன், என்.நந்தகுமார் வெள்ளவத்தை, எம்.பிரதீபன் விசுவமடு, ரி.நந்தகுமார் மொறட்டுவ, எஸ். சதீஸ்குமார் பல்லவராயன் கட்டு, வி.நவரட்ணம் விசுவமடு, எஸ் சதீசன் தர்மபுரம், செல்வி. எஸ். வீரசிங்கம் விசுவமடு, ரி.ஆர். யூலியஸ் ஜெயபுரம் வடக்கு, ஆர்.கோகுலரூபன் உருத்திரபுரம், க.விஜயராசா வட்டக்கச்சி, பி.கௌரிபாலன் வன்னேரிக்குளம், கே.பிரபாகரன் திருவையாறு, செல்வி கே.கௌசிகா பேராளை, கே.சுபாஸ்கண்ணா வட்டக்கச்சி, ரி.முரளிதரன் உருத்திரபுரம், செல்வி வி.சுவேந்தினி வட்டக்கச்சி, செல்வி ரி.சிவசுதராசா முழங்காவில், செல்வி. ஏ.சாந்தகுமாரி உருத்திரபுரம், செல்வி எஸ். சுகந்தினி செக்காலை, செல்வி. ஆர்.தெய்வேந்திரன் முழங்காவில், செல்வி கே.தர்சினி இராமநாதபுரம், செல்வி என்.கார்த்திகா கண்டாவளை, கே.குகேந்திரன் ஆலங்கேணி, கே.பொன்னம்பலம் கண்டாவளை, எஸ்.கருணாகரன் கந்தபுரம், செல்வி பி.வசந்தரூபி உருத்திரபுரம், செல்வி எஸ்.சுவர்ணா பல்லவராயன் கட்டு, எஸ்.நந்தகுமார் கண்டாவளை, ரி.சுதர்சன் கிராஞ்சி, என்.நியூட்டன் புளோப்பளை கிழக்கு, செல்வி. வி.தக்சிலாநிதி அம்பாள் நகர், செல்வி ஆர்.வக்சலா நல்லூர், செல்வி கே. அற்புதலிங்கம் முழங்காவில், செல்வி எஸ்.தனுசியா உருத்திரபுரம், செல்வி எஸ். ஜெனித்தா உருத்திரபுரம், செல்வி எஸ்.மேகலா தர்மபுரம், வி.சரூபன் குஞ்சுப்பரந்தன், ரி.றஜனிகாந் கந்தபுரம், செல்வி ஏ.கணேசலிங்கம் பிரமந்தனாறு, செல்வி ரி.தேவகி முத்தையன்கட்டு, செல்வி ஈ.மங்களேஸ்வரி பல்லவராயன்கட்டு. (சோ)

# கூட்டுறவுப் பணியாளர் ஒருநாள் செயலமர்வு

(அலுவலக செய்தியாளர்)

கூட்டுறவுப் பணியாளர்களின் நிதிசார் திறமைகளை மேம்படுத்துவதற்கான ஒருநாள் செயலமர்வு எதிர்வரும் 16.06.2003 அன்று கூட்டுறவுச் சபை மாநாட்டு மண்டபத்தில் நடைபெற ஏற்பாடாகியுள்ளது.

மேற்படி செயலமர்வில் கிளி. மாவட்டத்திலுள்ள சகல கூட்டுறவு அமைப்புகளிலுமிருந்து நிதித்துறை பணியாளர்களை தவறாது கலந்து கொள்ளும் வண்ணம் கூட்டுறவுச் சபைத் தலைவர் அ.கேதீஸ்வரன் வேண்டுகை விடுத்துள்ளார். (சோ)

செஞ்சிலுவை அறிவை அளவிடும் போட்டியில்

# தெரிவு செய்யப்பட்டோருக்கு பரிசு வழங்கிக் கௌரவிப்பு!

உலக செஞ்சிலுவை தினத்தை ஒட்டி செஞ்சிலுவை பற்றிய அறிவை அளவிடும் போட்டிப் பரீட்சையில் தெரிவு செய்யப்பட்டோர் பரிசில் வழங்கிக் கௌரவிக்கப்பட்டுள்ளனர்.

கீழ்ப்பிரிவில் முதலாம் இடத்தை செல்வி அஜந்தினி துரைராசாவும் (கரைச்சிப்பிரிவு), இரண்டாமிடத்தை செல்வி யூலிகா பாஸ்கரனும் (கரைச்சிப்பிரிவு), மூன்றாம் இடத்தை வாணுஜா மதுரநாயகமும் (கரைச்சிப் பிரிவு). மேற்பிரிவில் முதலாம் இடத்தை செல்வன் திரவியச் செல்வம் ஸ்ரீரஜீவன் (கரைச்சிப்பிரிவு), இரண்டாம் இடத்தை செல்வி கதீஷா ஆறுமுகநாதன் (பூநகரிப்பிரிவு), மூன்றாம் இடத்தை செல்வி ரோகினி வர்ணகுலசிங்கம் (கரைச்சிப் பிரிவு) ஆகியோரே தெரிவு செய்யப்பட்டு கௌரவிக்கப்பட்டவர்களாவர்.

# தென்மாகாண சபை அமைச்சர் கொலை; கொலைமிரட்டல் விடுத்தோர்மீது விசாரணை

(கொழும்பு)

தென்மாகாண சபை அமைச்சர் றஞ்சித் கொலை தொடர்பாக விசாரணை நடத்தும் கொழும்பு குற்றத் தடுப்புப் பிரிவினர் இதற்கு முன்பு அவருக்கு கொலை மிரட்டல் விடுத்த சிலரை தீவிரமாக விசாரணை செய்து வருகின்றனர். இதற்காக மூன்று குழுக்களாக இவர்கள் செயற்படவுள்ளனர். இவரை நீண்டநாட்களாக கொலை செய்யத் திட்டம் தீட்டியதாக பாதாள உலகக் குழுவைச் சேர்ந்தவர்கள் மீது கவனம் செலுத்தப்படுகிறது.

நன்கு திட்டமிட்டு நடத்தப்பட்ட இக்கொலைச் சம்பவம் நடந்த அன்று குற்றத் தடுப்புப் பிரிவுக்கு அமைச்சர் றஞ்சித் சென்றிருப்பதை அறிந்து அயலில் ஒழித்து நின்றே இக்கொலை இடம்பெற்றுள்ளது.

மேலும் இவரைக் கொலை செய்ய நேரம் பார்த்து காத்திருந்ததாகக் கருதப்படும் ஒருவர் தற்போது சிறையிலுள்ளதாகவும் அவரின் குழுவில் அங்கம் வகிக்கும் முன்னாள் விசேட அதிரடிப்படையைச் சேர்ந்த இருவர் தலைமறைவாகித் திரிவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இக்கொலை தொடர்பாக பொது மக்கள் சிலரும் விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளனர்.

கிளி. மாவட்ட பாடசாலை

# மாணவர் பாவனைக்கு எவர் சில்வர் பாத்திரம்!

கிளிநொச்சி மாவட்ட பாடசாலைகளில் எவர் சில்வர் பாத்திரங்கள் வழங்கப்படவுள்ளதாகத் தெரியவந்துள்ளது. இது குறித்து கிளி. அரச அதிபர் தி.இராநாயகம் எமது செய்தியாளரிடம் தெரிவிக்கையில், தற்போது, மாணவர்களுக்குப் பாடசாலைகளில் வழங்கப்பட்டு வரும் சத்துணவு, இலைக்கஞ்சி பாவனைக்கு பிளாஸ்ரிக் பாத்திரங்களே பாவனைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றது.

பிளாஸ்ரிக் பாவனைகள் சுகாதாரத்திற்கு உகந்ததல்ல என்பதனை பாடசாலை போசாக்கு உணவு வழங்கும் உலக உணவுத்திட்ட அதிகாரிகளுக்கு எடுத்தியம்பிய தற்கமைவாக மேற்படி அதிகாரிகள் பாடசாலை மாணவர்களுக்கு பிளாஸ்ரிக் பாத்திரத்திற்குப் பதிலாக எவர்சில்வர் பாத்திரங்களை வழங்க முன்வந்துள்ளனர் எனத் தெரிவித்தார். (சோ)

பண்டாரநாயக்கா ச.தே.வி.நிலையத்தில்

# புதிய எரிபொருள் நிலையத் தொகுதி திறப்பு

கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தில் விமானங்களுக்கு எரிபொருள் நிரப்பும் புதிய நிலையத்தொகுதி ஒன்று70 கோடிரூபா செலவில் நிர்மானிக்கப்பட்டுள்ளது. இதில் ஒரே நேரத்தில் ஆறு விமானங்களுக்கு எரிபொருள் வழங்குவதற்கான வசதிகள் செய்யப்பட்டுள்ளன. நிலத்தடி குழாய்கள் மூலம் தொலைவில் நிற்கும் விமானங்களுக்கும் எரிபொருளை வழங்கமுடியும்.

எரிபொருள் நிரப்புவதற்கு வரும் விமானங்கள் 16 இந்தப் புதிய எரிபொருள் நிரப்பு நிலையத் தொகுதியில் நிறுத்திவைக்கக் கூடிய வசதிகள் செய்யப்பட்டுள்ளது.

இதுவரை காலமும் ஒரு விமானத்திற்கு எரிபொருள் நிரப்ப மூன்று மணித்தியாலங்கள் எடுத்தன. இந்த எரிபொருள் நிரப்பு நிலையம் மூலம் ஒரு விமானத்திற்கு எரிபொருள் நிரப்ப ஒருமணித்தியாலம் போதுமானதென்று கூறப்படுகிறது.

இது தெற்காசியாவிலேயே அதி நவீன விமான எரிபொருள் நிரப்பு நிலையம் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

# ஆளும்கட்சி பா.உ. பொலிஸாரால் கைது!

கொழும்பு ஐந்து நட்சத்திர விடுதி ஒன்றில் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்ட குற்றச்சாட்டில் ஆளும் கட்சி அம்பாந்தோட்ட பாராளுமன்ற உறுப்பினர் திலீப்வேதராட்சி பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

பொலிஸ் விசாரணைக்குப் பின் இவர் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தேர்தலில் போட்டியிடாதோரை

# மாகாணசபை உறுப்பினராக நியமிப்பது சட்டவிரோதமானது.

உயர் நீதிமன்றம் தீர்ப்பு

தேர்தலில் போட்டியிடாத ஒருவரை மாகாணசபை உறுப்பினராக நியமிப்பது சட்ட விரோத மானது என்று உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

1998 ஆம் ஆண்டு ஊவா மாகாணத்தில் போட்டியிடாத சமரவீர வீரவன்னியை பொ.ஐ. முன்னணியின் மாகாண சபை உறுப்பினரை நியமிக்கும்படி கடந்த ஆண்டு மே மாதம் 24ஆம் திகதி தேர்தல் ஆணையாளர் வெளியிட்ட வர்த்தமானி அறிவித்தலை உயர் நீதிமன்றம் இரத்துச் செய்துள்ளது.

முன்னர் டாக்டர் பாக்கியசோதி சரவணமுத்து, டாக்டர் றொகான் எதிரிசிங்க ஆகியோர் இது சம்பந்தமாக தாக்கல்செய்த மனுவை மேல்முறையீட்டு நீதிமன்றம் நிராகரித்திருந்தது. பின்னர் அவர்கள் உயர் நீதிமன்றில் விசேட மனு வென்றை தாக்கல் செய்தனர்.

உயர் நீதிமன்றம் மேல் முறையீட்டு நீதிமன்றத்தினர் தீர்ப்பை புறக்கணித்து மனுமீதான விசாரணையை ஏற்றுக் கொண்டது. தேர்தல் ஆணையாளர் மாகாண சபை சட்டத்துக்கு முரணாக நடந்துள்ளார் என்ற தீர்மானத்திற்கும் உயர் நீதிமன்றம் ஒரு வேட்பாளருக்காக வாக்களித்த வாக்காளர்களை அல்லது கட்சியை இந்த நடடிக்கை பாதிக்கும் என்றும் கூறியுள்ளது.

# விசுவமடு குளம் உடைப்பெடுக்கும் அபாயம்!

விசுவமடு குளத்தின் முதலாவது துருசுக்கும் இரண்டாவது துருசுக்குமிடைப்பட்ட பகுதி உடைப்பெடுக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

இதனால் குளத்திலிருந்து நீர் திறந்துவிடப்பட்டுள்ளதோடு அணைக்கட்டு உடைப்பெடுக்காது பாதுகாக்கும் நடவடிக்கையை முத்துஐயன் கட்டு நீர்ப்பாசன திணைக்கள அதிகாரிகள் மேற்கொண்டுள்ளனர். (14)

மேசன், தச்சு வேலைக்கான

# தொழில்நுட்ப பயிற்சிக்கான விண்ணப்பங்கள் கோரல்

(கண்டாவளை)

கிளிநொச்சி தொழில்நுட்பக் கல்லூரியினால் மேசன் வேலை, தச்சு வேலை தொழில்நுட்பப் பயிற்சிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

கண்டாவளை, கரைச்சி, பூநகரி, பளை ஆகிய பிரதேச செயலர் பிரிவிலிருந்து தொழிற் பயிற்சிக்கு ஆட்கள் சேர்த்துக் கொள்ளப்படவுள்ளனர்.

ஆறு மாத கால பயிற்சியின் போது ஒவ்வொரு மாதமும் 2000 ரூபா ஊக்குவிப்புப் பணம் வழங்கப்படும். 18 வயதுக்கும் 45 வயதுக்கும் இடைப்பட்ட ஆண், பெண் இருபாலாரும் எதிர்வரும் 5ஆம் திகதிக்கு முன்னர் தமது சுயவிபரங்களைக் குறிப்பிட்டு தமது பகுதி கிராம சேவகர்களிடமோ அல்லது கிளிநொச்சி தொழில்நுட்பக் கல்லூரியிலோ விண்ணப்பங்களை ஒப்படைக்கலாம் என தொழில்நுட்பக் கல்லூரி அதிபர் நிப்பிரபாகரன் அறிவித்துள்ளார். (14)

# நிர்வாகசபைக் கூட்டம்

கிளி/கிளிநொச்சி மத்திய கல்லூரியின் பழைய மாணவர் சங்க நிர்வாக சபைக்கூட்டம் இன்று 29ஆம் திகதி பிப.3.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

எனவே சகல நிர்வாக சபை உறுப்பினர்களையும் இன்று கூட்டத்திற்கு தவறாது சமுகமளிக்கும் வண்ணம் கிளிநொச்சி மத்திய கல்லூரி அதிபர் வேண்டியுள்ளார். (சோ)



காத்மண்டுவில் எவரெஸ்ட் மலை ஏறிய 50 ஆவது வருடக் கொண்டாட்டத்தில் பங்குபற்றுவதற்கு வருகை தந்தவர்களின் கூட்டத்தில் உரையாற்றுவதை அவதானிக்கும் முதன் முதல் சிகரத்தை அடைந்த நியூசிலாந்து நாட்டவரான சேர் எட்மன் ஹில்லாரி (வயது –83)

# இஸ்ரேல்–பலஸ்தீன சமாதானத் திட்டம்

# ஜோர்தானில் முக்கிய சந்திப்பிற்கு ஏற்பாடு!

## அமெரிக்க சனாதிபதியும் பங்கேற்பார்

**இஸ்ரேல் - பலஸ்தீன சமாதானத் திட்டத்தை முன்னெடுத்துச் செல்லும் வகையில் ஜோர்தானில் அடுத்த வாரம் முக்கிய சந்திப்பொன்று இடம்பெற ஏற்பாடாகியுள்ளது. அமெரிக்க சனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ புஷ் தலைமையில் இந்தச் சந்திப்பு நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.**

இஸ்ரேல் - பலஸ்தீன சமாதான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுவரும் வேளையில் இதன் தற்போதைய நிலை குறித்து இஸ்ரேலியப் பிரதமர் ஏரியல் ஷரோன் தனது அமைச்சரவை உறுப்பினர்களுடனும் முக்கிய அரசியல் தலைவர்களுடனும் மற்றும் இராணுவ உயரதிகாரிகளுடனும் கலந்தாலோசனை நடத்தியுள்ளார்.

அமெரிக்காவின் தலைமையில் மேற்கொள்ளப்படும் சர்வதேச சமூகத்தின் சமாதானத் திட்டத்திற்கு ஷரோனின் அமைச்சரவை அங்கீகாரம் அளித்துள்ள நிலையில் மேற்கொண்டு எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்தே இதில் தீவிரமாக ஆலோசிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, பலஸ்தீனத்திற்கான சமாதானத் திட்டத்தின் அடுத்த கட்ட நடவடிக்கை பற்றிக் கலந்தாலோசிக்கவென அமெரிக்க சனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ புஷ் தலைமையில் ஜோர்தானில் கூட்டமொன்று இடம் பெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இஸ்ரேல் பிரதமர் ஏரியல் ஷரோன் பலஸ்தீன பிரதமர் மகமூத் அப்பாஸ் ஆகியோரும் இக்கூட்டத்தில் பங்கேற்கவுள்ளனர்.

ஜோர்தானில் இடம்பெறவுள்ள கூட்டம் மிகவும் முக்கியம் வாய்ந்ததொன்றாகக் கருதப்படுகின்றது. அமெரிக்க சனாதிபதி இங்கு வருகை தருவது அதன் முக்கியத்துவத்தை மேலும் அதிகரிக்கச் செய்துள்ளது. இதன் மூலம் பிராந்தியத்தில் அமைதியேற்பட வாய்ப்புக்கள் அதிகரிக்குமென இஸ்ரேலிய வெளிவிவகார அமைச்சர் சாலொம் தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவினால் முன்வைக்கப்பட்டுள்ள பலஸ் தீனத்திற்கான சமாதானத் திட்டம் தற்போது உலகத் தலைவர்களின் கவனத்தை ஈர்த்துள்ளது. ஐரோப்பிய, இஸ்ரேல், அரபு தலைவர்கள் இப்போது இந்த விடயத்திற்கே முக்கியத்துவம் கொடுத்துப் பேசிவருகின்றனர் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

# ஆந்திராவில் கடும் வெப்பத்தால் இரு வாரங்களில் 430 பேர் பலி

(புதுடில்லி)

இந்தியாவின் ஆந்திரப் பிரதேசத்தில் கடந்த இரண்டு வாரங்களில் கடும் வெப்பத்தினால் 430 பேர் பலியாகியுள்ளனர். கடும் வெப்பம் காரணமாக வெப்பநிலை 40 பாகை செல்சியஸ் வரை உயர்வடைந்துள்ளது. கைதராபாத் ஏரியும் வற்றிவிட்டது. கடந்த ஆண்டும் இக்காலப் பகுதியில் வெப்ப நிலை 50 பாகை செல்சியசை தாண்டியது குறிப்பிடத்தக்கதாகும்.



கடந்த சில நாட்களில் பல படையினரைப் பலிகொண்ட கரந்தடித் தாக்குதலினால் பாக்தாத் வீதிகளில் சோதனையிலீடுபடும் அமெரிக்கப் படையினர்.

# அல்ஜீரியாவில் மற்றுமொரு நிலநடுக்கம்

# 9 பேர் உயிரிழப்பு; 200 பேரளவில் காயம்!

(அல்ஜியஸ்)

அல்ஜீரியா நாட்டில் நேற்று முன்தினம் மீண்டும் நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது. இதில் 09 பேர் இறந்துள்ளனர். 200 பேர் காயமடைந்துள்ளனர். ஏராளமான கட்டடங்கள் இடிந்து தரைமட்டமாகியுள்ளன.

அல்ஜீரிய தலைநகர் அல்ஜீயசில் நிலநடுக்கம் ஏற்படுவது இதுஇரண்டாவது தடவையாகும்.

கடந்தவாரம் ஏற்பட்ட நிலநடுக்கத்தில் 2217 பேர் உயிரிழந்துள்ளனர். 9085 பேர் ஆபத்தான நிலையில் மருத்துவ மனைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இந்நிலையிலேயே நேற்று முன்தினமும் நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது. றிக்டர் அளவுப்படி 5.8 என பதிவாகியுள்ளது.

# ஈராக்கில் நிலை கொண்டுள்ள அமெ. படையினர் மீது தாக்கு

## இரண்டு படையினர் பலி

ஈராக்கில் பாக்தாத் நகரிற்கு மேற்கே 50 கிலோமீற்றர் தொலைவிலுள்ள கொலூஜா நகரில் அமெரிக்கப் படையினர் மீது நேற்று முன்தினம் இடம பெற்ற தாக்குதலில் இரண்டு படையினர் கொல்லப பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ரொக்கற்றுக்கள் மூலம் ஏவப்படும் கிறனைற்றுக்கள் மற்றும் துப்பாக்கிகளால் தாக்கப்பட்டதாக அமெரிக்க செய்திகள் தெரிவிக்கின்றன.

இத்தாக்குதலையடுத்து அமெரிக்கப் படையினர் நிகழ்த்திய பதில் தாக்குதலில் தாக்குதலாளரில் இரண்டு பேர் கொல் லப்பட்டதோடு ஆறு பேர் பிடிக்கப்பட்டுள்ளதாகவும் அமெரிக்கச் செய்தி தெரிவித்துள்ளது.

ஈராக்கில் அமெரிக்க நிர்வாகத்தின் தலைவர் கடந்த திங்களன்று பாதுகாப்பு நிலை மேம்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டிருந்த அடுத்த நாள் இத்தாக்குதல் சம்பவம் இடம்பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.

## தமிழக காங்கிரசுக்கு புதிய தலைவர்!

(சென்னை)

சோ.பாலகிருஸ்ணன், இளங்கோவன் செயற்பாடுகளில் காங்கிரஸ் தலைமை அதிருப்தி தெரிவித்துள்ளமையினால் தமிழகத்திற்கு புதிய தலைவரை நியமிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

தமிழக காங்கிரஸ் கட்சிக்குள் கோஷ்டிப் பூசல்கள் அதிகரித்துள்ளமையால், முக்கிய முடிவுகளை எடுப்பதற்காக 11 பேர் கொண்ட வழிகாட்டுதல் குழு அமைக்கப்பட்டுள்ளது.

இக்கூட்டத்திலேயே புதிய தலைவரை நியமிக்க அகில இந்திய காங்கிரஸ் முடிவு செய்துள்ளது என அரசியல் வட்டாரங்கள் கூறுகின்றன.

# இந்தியாவுடன் உறவை மேம்படுத்திக்கொள்ள

# பாகிஸ்தானுக்கு இதுவே இறுதிச் சந்தர்ப்பம்!

## - பேர்ளினில் வாஜ்பாய் தெரிவிப்பு

இந்தியாவுடனான உறவை மேம்படுத்த பாகிஸ்தானுக்கு கடைசி வாய்ப்பு என இந்தியப் பிரதமர் வாஜ்பாய் திட்டவட்டமாக அறிவித்துள்ளார். பாகிஸ்தானுடன் அமைதியை ஏற்படுத்துவதற்கான தற்போதைய முயற்சிகள் மூன்றாவதும், இறுதியானதும் என பிரதமர் வாஜ்பாய் கூறியுள்ளார்.

ஜேர்மன், ரஷ்யா, பிரான்ஸ் ஆகிய நாடுகளில் ஒரு வாரகால அரசுமுறை சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள வாஜ்பாய், ஜேர்மன் தலைநகர் பேர்ளினில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், தீவிரவாதத்தை ஒழிக்க அனைத்து நாடுகளும் ஒருங்கிணைந்து செயற்பட வேண்டும். பயங்கரவாதம் என்பது ஒரு நாடோ, ஒரு மண்டலமோ சம்பந்தப்பட்டது அல்ல. உலக அளவில் இதன் தாக்கம் இருப்பதால் இதற்கு எதிராக சர்வதேச அளவில் போராட வேண்டிய தேவை எழுந்துள்ளது என்றும்,

பயங்கரவாதத்திற்கு எதிராக சர்வதேச அளவில் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கை குறித்து தாம் ஜேர்மன் பிரதமர் ஜிராச் ஸ்குருடருடன் பேச்சு நடத்தவுள்ளதாகவும் கூறியுள்ளார். அதே நேரம் இந்தியாவின் பாதுகாப்பை விட்டுக்கொடுக்க முடியாது என்றும் கூறியுள்ளார். ஏற்கனவே இரு நாடுகளுக்குமிடையில் இரண்டு முறை அமைதியை ஏற்படுத்த தாம் மேற்கொண்ட முயற்சிகளைக் குறிப்பிட்ட வாஜ்பாய் லாகூருக்கு அமைதிச் செய்தியை தாம் கொண்டு சென்றதாகவும், ஆனால் அந்த செய்தி கொண்டு சென்ற லாகூர் பேருந்து கார்கில் சிகரத்தில் மோதி நொருங்கி விட்டது. அடுத்து எனது அழைப்பை ஏற்று ஆக்ரா வந்த பாகிஸ்தான் சனாதிபதி முஷாரப் நிபந்தனைகள் விதித்தமையினால் தான் பேச்சுவார்த்தை தோல்வி அடைந்தது என்றும் அவர் கூறினார்.



பல பகுதிகளில் எதிர்பார்த்த மழை கிடைக்காத நிலையில் மழையைக் கொண்டுவரும் கடும்காற்று சிட்னி நகரில் ஆரம்பித்துள்ளது. வெள்ளம் எதிர்பார்க்கப்படுகின்றது. காற்றின் வேகத்தில் இழுக்கும் பட்டம் ஒன்று வானில்.

# வல்லரசுகளை அதிர வைக்கும்

ஈராக்கில் ஏற்பட்ட மரண ஓலங்கள் உலகை உலுக்கியதே.... அந்த ரணம் மாறுவதற்கு முன்பே தற்கொலைக் குண்டுத் தாக்குதல்கள் உலகை அதிர வைத்துக் கொண்டிருக்கின்றன.

கடந்த ஓரிரு வாரங்களில் சவுதி அரேபியா, மொறோக்கோ, செச்சென்யா, இஸ்ரேல், பலஸ்தீனம் ஆகிய இடங்களில் வெடித்த மனித குண்டுகளால் மேற்குலகும், அரபு உலகமும் பொறிகலங்கிப் போயுள்ளது.

ஆனால், தற்கொலைத் தாக்குதல்கள் தற்போது வழமையாகிவிட்டன. மனித வெடிகுண்டுகள் வெடிப்பதும், உலக நாடுகள் கண்டிப்பதும் பின்னர் இத்தகைய சம்பவங்கள் தொடர்வதும் முற்றுப்பெறாத தொடர் கதைகளாயிற்று.

ஈராக்கில் அமெரிக்காவின் தாக்குதலுக்கு முன்னரே எதிர்பார்க்கப்பட்ட குண்டு வெடிப்புக்களே தற்போது நிகழ்வதாகவும் கருத்து நிலவுகின்றது.

ஆனால், சவுதியில் உள்ள தனது இராணுவத்தை அமெரிக்கா வாபஸ் பெறுவதாக அறிவித்தபோதும், நிஜத்தில் அது நடைமுறைப்படுத்தப்படவில்லை என்பதுடன் முப்பதாயிரத்திற்கும் அதிகமான அமெரிக்க மக்களும் அங்கு வாழ்ந்து வருவது பிடிக்காத நிலையில் இத்தாக்குதலானது. அமெரிக்க இராணுவம் வெளியேறுவதுடன் அமெரிக்க மக்களும் அகல வேண்டும் எனக் கூறுவதாகவே அமைந்துள்ளது என ஊகங்களும் வெளிப்பட்டுள்ளன.

அதேநேரம், சவுதியில் அமெரிக்காவின் இராணுவம் வெளியேறாமை, ஈராக் போருக்கான சவுதியின் ஆதரவு, மோசமடைந்த பொருளாதாரம், வேலையின்மை என்பன காரணமாகவும் இத்தாக்குதல் தொடரப்பட்டிருக்கலாம் என இஸ்லாமிய மறுசீரமைப்புக்கான இயக்கத்தின் தலைவர் சாத்-அல்-பாகிஹ் முணுமுணுத்துக் கொண்டிருக்கின்றார்.

மறுபுறம் சவுதியில் மக்களைப்



தலை எப்படி சமாளிப்பது என சிறிலங்காவிடம் ஆலோசனை வழங்குமாறும் பிரிட்டன் கோரிக்கை விடுத்துள்ளது.

இந்த வகையில், குண்டு வெடிப்புக்கள் எங்கு நடந்தாலும் அவை அமெரிக்காவிற்கு எதிரான உணர்ச்சிகளின் தொகுப்பாக உள்ளது.



ஜெருசலேம், ஹெப்ரோன் ஆகிய இடங்களில் வெடித்த குண்டுகளால் அமெரிக்காவின் திட்டம் அரசல் புரசலாக கசிய ஆரம்பித்துள்ளது.

அமெரிக்காவின் புதிய கொள்கைப்படி பலஸ்தீனத்தில் தனது ஆதிக்கத்தைச் செலுத்த 'யசீர் அரபாத்' தடையாக இருப்பதால் அவரை அகற்ற வேண்டும்.

அதற்கு இஸ்ரேலை கருவியாகவும் பயன்படுத்த வேண்டும் எனும் கருத்தும் அரசியல் வட்டாரங்களில் நிலவுகின்றது.

அந்த வகையில்தான் இஸ்ரேலில் வெடித்த குண்டுகளின் பின்னே 'யசீர் அரபாத்' இருந்தார் என்று இஸ்ரேலின் குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

அது மட்டுமன்றி பிரதமர் 'மஹ்மூத் அப்பாஸ்' உற்சாகமிழக்கவும் அவரது முயற்சிகளை முடக்கவுமேஅரபாத் இந்தத் தாக்குதலை ஊக்குவிப்பதாகவும் இஸ்ரேலின் குற்றச்சாட்டு விரிகின்றது.

எனவே, எங்கே எங்கே அமெரிக்காவின் செல்வாக்கு செலுத்தப்படுகின்றதோ

அமெரிக்காவிற்கு எதிரான தாக்குதல்கள் அனைத்தும் அமெரிக்காவை ஆதரிக்கும் நாடுகளில் தான் நிகழ்த்தப்படுவதால், இது தீவிரவாதிகளின் புதிய வியூகமாகவும் இருக்கலாம் எனும் கருத்தும் இல்லாமலில்லை.

அதேநேரம், வெடிக்கும் ஒவ்வொரு மனித குண்டுகளின் பின்னேயும் புதைந்து கிடக்கும் தியாகம் வெறும் பயங்கரவாதமா.... எனும் வினாவும் எழுப்பப்படாமல் இல்லை.

ஆனால், இதையெல்லாம் நினைத்துப் பார்க்க முக்கியமாக அமெரிக்காவிற்கு நேரம் இருப்பதில்லை.

அதனால்தான், பயங்கரவாதத்திற்கு எதிரான போர்; தீவிரவாதத்திற்கு எதிரான யுத்தம்; என அமெரிக்கா தான் பிடித்த முயலுக்கு இரண்டே கால் எனும் சாதிப்பில், ஐ.நா. சபையையும் மீறி செயற்பட்டு வருகின்றது.

ஆனால், 2001ஆம் ஆண்டு செப்டெம்பர் 11ஆம் திகதி அமெரிக்காவில் வர்த்தகமையம் தாக்கப்பட்டமை உலக பயங்கரவாதம் என்பது வெறும் சொல்லளவில் கட்டுப்படுத்தக் கூடிய ஒன்றல்ல என்பதுடன்,

இன்னும் இரண்டொரு நாட்களில்

# தொடர் குண்டு வெடிப்புக்கள்...

ஈராக்கின் மீதான போர் முஸ்லிம் உலகில் அமெரிக்காவிற்கு எதிரான ஓர் எதிர்ப்புணர்வை, கசப்புணர்வை உருவாக்கி இருந்தது. இருக்கின்றது என்பதே உண்மை.

அத்துடன், அமெரிக்காவிற்கு ஆதரவாக சவுதிஅரேபியா, மொறோக்கோ இன்னும் பல நாடுகளும் ஆதரவு வழங்கின.

இவ்வாறு ஆதரவு வழங்கிய நாடுகளில்தான் தொடராகக் குண்டுகள் அதிர்ந்து கொண்டிருக்கின்றன. அதுவும் அந்நாடுகளிலுள்ள அமெரிக்கர்களின் குடியிருப்புக்கள், அலுவலகங்களில்தான் அதிகம் இந்த மனித குண்டுகள் உலுக்கியெடுத்துள்ளன.

அந்த வகையில்தான் கடந்த 15ஆம் திகதி சவுதிஅரேபியாவின் தலைநகர் றியாத்தில் நான்கு தொடர் குண்டு வெடிப்புக்களில் அந்நகரம் கிலி கொண்டுள்ளது. 91 பேரின் மரணம், 200 பேரின்

**அ. கலைவாணி**

படுகாயம், நகரில் வாழும் அமெரிக்க மக்களை திகிலுக்குள்ளாக்கியுள்ளது.

ஈராக்கில் புதிய நிர்வாகம், மேற்காசிய உலகின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்காக வளைகுடாப் பயணத்தை அமெரிக்க வெளியுறவுத் துறை அமைச்சர் கொலின் பவல் மேற்கொள்ளும் முதல் முயற்சியாக சவுதி அரேபியாவிற்குள் கால் பதிக்கும் செயலின் ஆரம்பத்திலேயே மனித குண்டுகள் வெடித்துள்ளதால்,

அமெரிக்காவை கொஞ்சம் அச்சப்பட வைத்தது என்னமோ உண்மைதான்.

அல்-கைதா அமைப்பின் தீவிரவாதிகளின் இந்தத் தாக்குதல்களே மக்களைப் பலி கொண்டுள்ளதாக சவுதி அரேபிய உள்துறை அமைச்சர் கவலையடைந்துள்ளார்.

பாதுகாபபது தனது கடமை, தீவிரவாதிகளின் ஊடுருவலை அனுமதிக்கப் போவதில்லை, சமூக சீர்திருத்த நடவடிக்கைகளைப் பரவலாக மேற்கொள்வது என சவுதி மன்னர் 'பாகித்' உறுதி எடுத்துக் கொண்டிருக்கின்றார்.

ஆனாலும், 'தீவிரவாதிகளின் ஊடுருவல் கட்டுப்படுத்தல்' என்பது எவ்வளவு தூரத்திற்குச் சாத்தியமாகும் எனும் வினாவும் ஒருபுறம் எழுப்பப்படாமல் இல்லை.

ஏனெனில், 1995இல்கூட அமெரிக்கர்கள் வாழும் பகுதி தீவிரவாதிகளின் தாக்குதலுக்கு உள்ளாகி இருந்தது. அதுவும் கார் குண்டு வெடிப்புதான் 09 பேரின் மரணத்தையும் உள்வாங்கி இருந்தது. இதனால்தான் சவுதியில் பாதுகாப்புப் பலமின்மை இன்றும், அன்றும் நிலவுவதாக அமெரிக்கா சினந்து கொள்கின்றது.

இதேபோல் மொறோக்கோவிலும் வர்த்தகத் தலைநகர் கார்நாத் லங்காவில் 5 தொடர் மாடிக் கட்டடத்தில் கடந்த 16 ஆம் திகதி மனித வெடிகுண்டுகள் 40 பேரைப் பலி கொண்டன.

சதைக் குவியல்களாகி போன 40 பேரில் 10 பேர் தற்கொலை குண்டுதாரிகள் என்றும், சர்வதேச பயங்கரவாதிகளின் சதிவேலையே மொறோக்கோ அதிரக் காரணமென உள்துறை அமைச்சர் 'முஸ்தபா சாகித்' கோபத்துடன் கூறியுள்ளார்.

ஈராக்கில் அமெரிக்க தாக்குதலை ஆதரிக்காத மொறோக்கோ ஏன் குண்டு தாக்குதலுக்கு இலக்கானது.... என்பது அவதானிகளிடையே புரியாத புதிராக உள்ளது.

இதுபோலவே பலஸ்தீனத்திலும், இஸ்ரேலிலும் பலஸ்தீனப் பிரதமர் மஹ்மூத் அப்பாசும், இஸ்ரேலியப் பிரதமர் ஏரியல் ஷரோனும் பேச்சுக்கள் நடத்தி முடித்த கையுடன் குண்டுகள் வெடித்துச் சிதறியுள்ளன.



அங்கே எல்லாம் அமெரிக்காவிற்கு எதிரான உணர்வலைகள் எழுந்துள்ளன என்பதை துணிந்து கூறிவிட முடியும்.

இதேபோல் ரஷ்யாவின் செச்சென்யாவில் வெடித்த குண்டு தனி நாடு கோரும் தீவிரவாதிகளின் அட்டூழியம் என ரஷ்யா கூறுகின்றது.

அதேபோல் ஜேர்மனியிலும் அல்-கைதா தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தவுள்ளதாக ஜேர்மனிய புலனாய்வு கூறியுள்ளது.

பிரிட்டன் கூட தீவிரவாதிகளின் அச்சுறுத்தலில் இருந்து தன்னைப் பாதுகாத்துக் கொள்ள நாட்டில் பலத்த பாதுகாப்பு அமைத்துள்ளது.

அத்துடன், பிக்பென் மணிக்கூட்டுக் கோபுரம், பாராளுமன்றம் என்பனவற்றைச் சுற்றி, கொங்கிறீட் தூண்களால் ஆன அரண்களை அமைத்து தீவிர பாதுகாப்பை நாளும் ஏற்படுத்திக் கொண்டிருக்கின்றது.


அத்துடன், தீவிரவாதிகளின் தாக்கு

அமெரிக்காவின் நியூயோர்க், வாஷிங்டன் நகரங்கள் தாக்கப்படலாமெனும் தீவிரவாதிகளின் இணையத்தள எச்சரிக்கை, அமெரிக்காவிற்கு விடுக்கப்பட்ட மிகப் பெரிய சவாலாகவும் உள்ளது என்பதில் சிறிதும் சந்தேகமில்லை.

அத்துடன் ஏற்கனவே, தொடர் குண்டு வெடிப்புக்களால் கொஞ்சம் அச்சம் அடைந்துள்ள அமெரிக்கா, தீவிரவாதிகளின் இந்த திடீர் அறிவிப்பால் நிலை குலைந்தாலும், தனது நாட்டைப் பாதுகாக்கும் முயற்சியில் புஷ் நிர்வாகம் மிக முனைப்பாகச் செயற்படாமல் இருந்திடாது என்பது மற்றைய சந்தேகமில்லாத உண்மை.

எனவே, உலகை அதிரவைக்கும் மனித குண்டு வெடிப்புக்கள் ஓய, உலக நாடுகள் என்ன செய்யப் போகின்றன.... எப்படி தீவிரவாதத்தை அணுகப் போகின்றன..... என்பதுதான் தற்போதைய எதிர்பார்ப்பாக உள்ளது. □

# எரிபொருள் நிரப்பு நிலையத்தில் சில நிமிடங்கள்...



**சரவணமுத்து தனபாலசிங்கம்**
விவசாயி

பெற்றோல் முடிந்துவிட்டது என்று எங்களைத் திருப்பி விடுகின்றனர். நாற்பது மைல்தூரம் பயணம்செய்து சேமமடு போகவேண்டும்.

ஆனால் நகரமாகிய கிளிநொச்சிப் பகுதியில் கூட பெற்றோல் இல்லாமல் அலையவேண்டி இருக்கின்றது.

மாங்குளம் பெற்றோல் நிரப்புநிலையத்திலும் பெற்றோல் இல்லை கிளிநொச்சி பெற்றோல் நிரப்பு நிலையத்திலும் பெற்றோல் இல்லை.



சமாதானம்,தடைநீக்கம் என்று பேசப்படுகின்றதே தவிர எமது வாழ்க்கையில் மீண்டும் பழைய பல்லவியே நிலவுகின்றது. எனது மோட்டார்சைக்கிளை ஏதாவது வாகனம் வந்தால் அதில் ஏற்றிக்கொண்டே சேமமடு போகப்போகின்றேன்.

**சுப்பிரமணியம் முகிலன்,**
வட்டக்கச்சி.

பெற்றோல் இல்லை என்று திரும்பிப்போகவேண்டி ஏற்பட்டுள்ளது:எனது மோட்டார் சைக்கிளில் உள்ள பெற்றோலைக்கொண்டு இன்னும் கால்மைல்தான் செல்ல முடியும். அதற்கு அப்பால் என்னசெய்வதென்று தெரியவில்லை.தமிழ் மக்கள் நிம்மதியான திருப்திகரமான வாழ்வை எதிர்பார்க்கின்றனர். அது தீரவேண்டும் என்பதே எமது அவா.

இந்த சமாதான காலத்திலும் இந்நிலையா? என்று யோசிக்கும்போது பெரும்கவலையாக இருக்கின்றது.



இந்த மக்களின் எரிபொருள் பிரச்சினையை சகலரும் கவனம் எடுத்து இதற்குத் தீர்வு காணவேண்டும் என்பதே எங்கள் வேண்டுகோள்.

## அவல நிலை தீருமா?

தி.ஜெயக்குமார்
அ.லோகீசன்



**பிரகாசம் சத்தியசீலன்**
மீன் வியாபாரி,
வேரவில், வலைப்பாடு. பூநகரி.

எனது தொழிலுக்கு மோட்டார் சைக்கிள் தான் உயிர்நாடி. நான் எனக்குத் தேவையான அளவு பெற்றோலை நிரப்பிக் கொண்டு போக வந்தேன். பெற்றோல் சைக்கிளில் முற்றாக முடிந்துவிட்டது. இனிநான் திரும்பிப் போகத்தான் வேண்டும்.

கூடிய விலையில் வேறு இடங்களிலாவது கிடைக்கின்ற பெற்றோலை அடித்துக் கொண்டுதான் போகவேண்டும். உழைக்கின்ற பணத்தை இவ்வாறு கூடிய விலை கொடுத்து பெற்றோல் நிரப்பி எரிப்பதைவிட இத்தொழிலையே கைவிடலாம்.

ஏனென்றால், இவ்வாறு செய்தால் எனக்கு எவ்வளவு இலாபம் வரப்போகின்றது. இக்காலத்திலும் தொழில் எதையும் திருப்திகரமாகச் செய்ய முடியாமல் இருக்கின்றதே இதை யாரிடம் சொல்லி அழுவது.

**முத்துலிங்கம் மனோகரன்,**
முகாமையாளர்,
எரிபொருள்நிரப்பு நிலையம். கரடிப் போக்கு.
கிளிநொச்சி.

இங்கு எரிபொருள் நிரப்ப வருபவர்களுக்கு மோட்டார் சைக்கிளுக்கு இரண்டு லீற்றர் பெற்றோலும். வாகனங்களுக்கு ஐம்பது லீற்றர் டீசலும் வழங்கவே எனக்கு அனுமதி உண்டு. ஆனால், அதற்கு மேல் என்னால் எரிபொருட்களை வழங்க முடியாது.

இதனால் பாவனையாளர்களுக்கும், எனக்கும் இடையே பல கருத்து மோதல்கள் இடம்பெறுகின்றன. எனக்கு அவர்களின் நிலைபுரிகின்றது. ஆனால்,இல்லாத எரிபொருளை எப்படி வழங்க முடியும். எரிபொருள் போதியளவு வந்து முழுமையாக வழங்கினாலே இந்தப் பிரச்சினை தீரும்.



**கிருஸ்ணசாமி கருணாகரன்**
செயற்கை முறை சினைப்படுத்துநர்
பூநகரி

நாங்கள் அரசாங்க அலுவலகத் தேவைகள், மருத்துவம் உட்பட சகல தேவைகளுக்கும் இங்கேயே வரவேண்டி உள்ளது. எனது மோட்டார் சைக்கிளை பணம் செலவழித்து பெற்றோலில் ஓடக்கூடியவாறு திருத்தம் செய்து வைத்துள்ளேன். நல்லபெற்றோல் கிடைக்கும் என்று நம்பியே இதனைத் திருத்திப்பயன்படுத்தினேன். ஆனால், இனி மண்ணெண்ணைவிட்டு பயன்படுத்தும் போதோ அல்லது வெளியில் தரமற்றபெற்றோலை அடித்துப் பயன்படுத்தும் போதோ மோட்டார்சைக்கிளை மிகவிரைவில் கட்டையில் ஏற்றுவது உறுதி. இதனைவிட திருத்தாமல் மண்ணெண்ணையிலேயே விட்டிருக்கலாம் போல் தோன்றுகிறது இந்தநிலை தொடர்ந்தால் இதனை மண்ணெண்ணைக்கு மாற்றுவதைவிட வேறுவழியில்லை.



**வைத்தியலிங்கம் குகராசா,**
**தலைவர்**
கரைச்சி தெற்கு பலநோக்குக் கூட்டுறவுச்சங்கம்.

எம்மால் கோரப்படுகின்ற எரிபொருள் தேவையின் மிகக்குறைந்த அளவே வன்னிப் பகுதிக்கு எடுத்துவர சமாதான காலமாகிய இந்நேரத்திலும் அரசாங்கத்தால் அனுமதிக்கப்படுகின்றது.இதனால், மக்கள் தேவையைப் பூர்த்தி செய்யமுடியாத துர்ப்பாக்கிய சாலிகளாக நாங்கள் உள்ளோம்.எமக்குத் தேவையான எரிபொருளைக் கொண்டுவர சகல தரப்பினரும் நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.



# ஆளும் கட்சி பாராளுமன்ற உறுப்பினர் நட்சத்திர விடுதிக்குள் புகுந்து அடாவடி

## -விடுதி ஊழியர்கள் சிலர் காயம்

(கொழும்பு)

கொழும்பு ஹில்டன் ஹோட்டலில் நடைபெற்ற திருமண வைபவ கொண்டாட்டத்தின் போது அம்பாந்தோட்டை மாவட்ட ஐ.தே.பா.உறுப்பினரான திலிப் வைத ஆராச்சி மிதமிஞ்சிய குடிபோதையில் வந்து அங்குள்ள பாத்திர பண்டங்களை நொருக்கியும் ஆகாயத்தை நோக்கி சுட்டும் அடாவடித்தனம் புரிந்துள்ளார். இதனால் விடுதி ஊழியர்கள் உட்பட ஆறுபேர் காயமடைந்ததாகத் தெரிவிக் கப்படுகின்றது.

இச்சம்பவம் பற்றி மேலும் தெரிய வருவதாவது,கொழும்பு பஞ்சி காவத்தையில் வாகன உதிரிகள் விற்பனை நிலைய உரிமையாளர் ஒருவரின் திருமண வைபவம் கடந்த 25 ஆம் திகதி மேற்படி விடுதியில் நடைபெற்றது. காலை 8 மணிக்கு ஆரம்பித்த விருந்து வைபவம் நள்ளிரவு 12 மணியுடன் நிறைவு பெற ஏற்பாடாகி இருந்தது சந்தேக நபர் மணப்பெண்ணின் சார்பில் கலந்து கொண்டதாகத் தெரிவிக் கப்படுகின்றது.

நிகழ்வு நிறைவு பெற்று அனைவரும் சென்றுவிட்ட நிலையில் மேற்படி நபர் அங்கிருந்து செல்ல மறுத்துள்ளார்.இதனால் விடுதி ஊழியர்களுக்கும் இவருக்குமிடையில் ஏற்பட்டவாக்குவாதம் கைகலப்பிற்கு வந்துள்ளது. மிதமிஞ்சிய போதையில் இருந்த இவர் அங்கிருந்த பீங்கான் கோப்பைகள் 40 தேனீர்கோப்பைகள் மின் விளக்குகள், உபகரணங்கள் என்பனவற்றை அடித்து நொருக்கிவிட்டு வெளியேறியுள்ளார். பின் தனது கைத்துப்பாக்கியால் மூன்று முறை வானத்தை நோக்கி சுட்டுவிட்டு தப்பி ஓடியுள்ளார். இவரைக் கைது செய்யவும் விசாரணை நடத்தவும் பொலிசார் முயற்சியில் இறங்கியுள்ளனர்.

# நம்பிக்கையில்லாப் பிரேரணையை சந்திப்பதற்குத் தயார்!

## - சிறிலங்கா உள்துறை அமைச்சர்

(கொழும்பு)

தன்மீது நம்பிக்கையில்லாப்பிரேரணை கொண்டு வரப்படுமானால் அதனை சந்திக்கத்தயாராக இருப்பதாக உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்க தெரிவித்துள்ளார்.

இதற்கு முன்னரும் தன்மீதான நம்பிக்கையில்லாப் பிரேரணையை எதிர்க்கட்சிகள் கொண்டுவந்ததை சுட்டிக்காட்டிய அவர் அத்தகைய பிரேரணை நாடாளுமன்றத்தில் தோற்கடிக்கப்படும் என்று கூறியுள்ளார்.

# ஆரம்பக்கல்வி ஆசிரியர்களின் செயலமர்வு திகதிகளில் மாற்றம்

(அலுவலக செய்தியாளர்)

துணுக்காய் கல்வி வலய பாடசாலைகளில் கற்பிக்கும் ஆரம்பக்கல்வி ஆசிரியர்களுக்கான செயலமர்வுத் திகதிகளில் மாற்றம் செய்யப்பட்டுள்ளதாக பணிப்பாளர் மா. தேவேந்திரன் அறிவித்துள்ளார்.

02.06. 2003,03.06. 2003 ஆகிய திகதிகளில் நடைபெற இருந்த செயலமர்வு 29.05.2003, 30.05.2003 ஆகிய திகதிகளில் நடைபெறும் எனவும், 28.05.2003 தொடக்கம் 01.06.2003 வரை 05 நாட்கள் நடைபெற இருந்த செயலமர்வு 02.06.2003 தொடக்கம் 06.06.2003 வரை நடைபெறும் எனவும் அறியத் தந்துள்ளார்.

## -பத்திரிகையாளர் தாக்கப்பட்டமை-

# விசாரணை செய்யும் குழு விரைவில் யாழ். பயணம்!

கடந்த வருடம் நெல்லியடியிலும் மானிப்பாயிலும் சிறிலங்காப் படையினரின் தாக்குதலுக்கு உள்ளான மூன்று தமிழ் பத்திரிகையாளர்களின் வாக்குமூலங்களை பதிவு செய்வதற்காக பாதுகாப்பு அமைச்சினால் நியமிக் கப்பட்ட விசாரணைக்குழுவொன்று யாழ்ப்பாணம் செல்லவுள்ளது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் பணிப்புரைக்கு அமைய பாதுகாப்பு அமைச்சு ஓய்வு பெற்ற உயர் நீதிமன்ற நீதியரசர் தலைமையிலான தனிநபர் விசாரணைக்குழுவொன்றை யாழ்ப்பாணம் அனுப்பவுள்ளது.

தாக்குதலுக்குள்ளான மூன்று தமிழ் ஊடகவியலாளர்களிடம் இருந்து அடுத்த மாதம் 4ஆம் 6ஆம் திகதி களில் இக்குழு யாழ். செயலகத்தில்வைத்து வாக்குமூலங்களைப் பதிவு செய்யவுள்ளது.

யாழ். தினக்குரல்,ஈழநாடு, புகைப்படப்பிடிப்பாளர் ஐ.பி.சி. செய்தியாளர் ஆகியோரே தாக்கப்பட்டவர்களாவர்.

# கொழும்பு வருகை

இந்தியாவின் எரிபொருள் துறை அமைச்சர் ராம்நாயக் கொழும்புக்கு விஜயம் செய்துள்ளார்.

சிறிலங்காவில் இந்திய எண்ணெய் கூட்டுத்தாபனம் பொறுப்பேற்றுள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்களின் பணிகள் ஆரம்பிக்கப்படவுள்ளதன் பின்னணியிலேயே அவர் இந்த விஜயத்தை மேற்கொள்ளவுள்ளார்.

# விடுதலைப் புலிகளின் பங்களிப்பு, ஒத்தாசையின்றி எத்திட்டத்தையும் நடைமுறைப்படுத்தல் சாத்தியமற்றது

## -இலங்கைக்கான யுனிசெவ் பிரதிநிதி சைபன்

(அலுவலக செய்தியாளர்)

"தமிழீழ விடுதலைப்புலிகளின் பங்களிப்பு மற்றும் ஒத்தாசையின்றி எவ்வித திட்டங்களையும் நடைமுறைப்படுத்துவதென்பது சாத்தியமற்றதொன்றாகும்"

இவ்வாறு நேற்று முன்தினம் கிளிநொச்சியில் இடம்பெற்ற போரினால் பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கான இடைத்தங்கல் முகாமிற்கான அடிக்கல்லினை நாட்டிவைத்து இலங்கைக்கான யுனிசெவ் பிரதிநிதி சைபன் உரைநிகழ்த்துகையில் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் சிறுவர்களின் எதிர்கால நலனிற்காக ஒஸ்லோ மாநாட்டில் முதன் முதல் குரலெழுப்பியவர்கள் தமிழீழ விடுதலைப்புலிகளே. எனவே அதற்கான செயற்றிட்டங்களைத் தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன், துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன் ஆகியோர் அறிமுகப்படுத்தி வருகின்றனர். இதன் காரணமாக அவர்களுக்கு முதற்கண் எனது நன்றியினைத் தெரிவித்துக் கொள்வதில் பெருமைப்படுகின்றேன்.


போரினால் பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கான இடைத்தங்கல் முகாமிற்கு இலங்கைக்கான யுனிசெவ் பிரதிநிதி சைபன் அடிக்கல் நாட்டிவைக்கிறார்

தமிழீழ விடுதலைப்புலிகளும், தமிழர் புனர்வாழ்வுக் கழகமும் போரினால் பாதிக்கப்பட்ட சிறுவர்கள் மற்றும் ஆதரவற்ற சிறுவர்களின் முன்னேற்றத்திற்காக இத்திட்டத்திற்குத் தங்களது முழுமையான பங்களிப்பை நல்கிவருகின்றமை எமக்கு உற்சாகத்தை ஏற்படுத்தியுள்ளது என்றார். (சோ)

# சிறிலங்கா விஜயம்!

(லண்டன்)

வட அயர்லாந்தின் முற்போக்கு ஐக்கியவாதக்கட்சியின் தலைவர் டேவிற் சிறிலங்காவிற்கு ஆறுநாள் விஜயமொன்றை மேற்கொண்டு கொழும்பிற்கு வந்துள்ளார்.

வட அயர்லாந்து மோதலை சமாளிப்பதில் தமக்குள்ள அனுபவங்களின் சிரமத்தைப் பகிர்ந்து கொள்வதன் மூலம் சிறிலங்காவின் சமாதான வழிமுறைக்கு உபயோகமாக இருக்கமுடியும் என்று நான் நம்புகிறேன் என அவர் கூறியுள்ளார்.

# துணுக்காய் வலயப் பாடசாலை அதிபர்களுக்கான கலந்துரையாடல்

(அலுவலக செய்தியாளர்)

துணுக்காய் வலயப் பாடசாலை அதிபர்களுக்கான விசேட கலந்துரையாடல் ஒன்று எதிர்வரும் 03.06.2003 செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு மு/மாங்குளம் மகா வித்தியாலயத்தில் இடம்பெறவுள்ளது.

இக்கலந்துரையாடலில் பல முக்கிய விடயங்கள் தொடர்பாகக் கலந்துரையாடப்படவுள்ளதால் பிரதிக் கல்விப்பணிப்பாளர், உதவிக் கல்விப்பணிப்பாளர், கோட்டக்கல்வி அலுவலர்கள், ஆசிரிய ஆலோசகர்கள், ஆசிரிய மத்திய நிலைய முகாமையாளர் ஆகியோரைத் தவறாது சமுகம் தருமாறு துணுக்காய் வலயக் கல்விப் பணிப்பாளர் மா.தேவேந்திரன் அறிவித் துள்ளார். (லோ)


கிளிநொச்சியில் கண்ணிவெடி செயற்பாட்டு ஒருங்கிணைப்புச் செயலகத்தினை சர்வதேச தமிழர் புனர்வாழ்வுக்கழக பணிப்பாளர் ஜெய் மகேஸ்வரன் நாடாவினை வெட்டித்திறந்து வைக்கிறார்.

# மட்டு. இராணுவ அதிகாரி தமிழ்க் குழுக்கள் சந்திப்பு

(லண்டன்)

மட்டக்களப்பு பிராந்திய சிறிலங்கா இராணுவ கட்டளை அதிகாரி நேற்று முன்தினம்தமிழ்க் குழுக்களின் பிரதிநிதிகளைச் சந்தித்துபேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

233வது படையணி கேணல் இராஜித சில்வாவிற்கும் தமிழ்க் குழுக்களுக்கும் இடையில் நடந்த சந்திப்பில் ஈ.பி.ஆர்.எல்.எவ். வரதர் அணி சார்பில் துரைரட்ணம், ஈ.பி.டி.பி.சார்பில் பரணிதரன், பிரதீபன், புளொட் சார்பில் பக்தரன் மற்றும் யூவி ஆகியோர் கலந்து கொண்டனர். இச்சந்திப்பில் பாதுகாப்புப் பற்றி ஆராயப்பட்ட போது தமது பாதுகாப்பு இதுவரை பூரணமாக உறுதிப் படுத்தப்படவில்லை என தமிழ்க் குழுவினர் கூறினர். பொலிசாருடன் தொடர்பு கொண்டு தேவைப்படும் மேலதிக பாதுகாப்பு வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று சிறிலங்காப் படை அதிகாரி உறுதியளித்துள்ளார்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொடர்பாக படை அதிகாரி கேட்ட போது வவுணதீவு, கொக்கட்டிச்சோலை மற்றும் வாகரை ஆகிய உள்ளூராட்சி மன்றப் பிரதேசங்கள் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசம் என தமிழ்க்குழுக்கள் கூறின. அரச கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் கூட தங்களால் தற்போது சுதந்திரமாக அரசியல் நடவடிக்கையில் ஈடுபடமுடியாதுள்ளதாகவும் இவர்கள் கூறினர்.


## விழாக்காலச் சிறப்பு வாணிப உரிமம்

எதிர்வரும் 2003.06.09 ஆம் நாள் இடம்பெறவுள்ள வற்றாப்பளை கண்ணகை அம்மன் ஆலயப் பொங்கல் நிகழ்வில் வாணிபம் நடத்தவுள்ளோர் 2003.06.05 ஆம் நாள் தொடக்கம் ஆலய முன்றலில் செயற்படவுள்ள வருவாய்ப்பகுதிச் சிறப்புச் செயலகத்தில் விழாக்காலச் சிறப்பு வாணிப உரிமத்தைப் பெற்றுக் கொள்ளுமாறு அன்புடன் அறியத்தருகின்றோம்.

வருவாய்ப்பகுதி,
நிதித்துறை,
தமிழீழ விடுதலைப்புலிகள்.

(3292)



பூநகரிப்பிரதேசத்தில் கண்ணிவெடிகளை அகற்றும் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டதன் பின் த.பு.கழக நிறைவேற்றுப் பணிப்பாளர். கே.பி. றெஜி, டென்மார்க் கண்ணிவெடி அகற்றும் பிரிவுப் பிரதிநிதி கைலாகு கொடுக்கையில் .


## பயணியர் பேருந்தும் புதிய பணி

ஆழியவளை, வேம்படி, மருதங்கேணி, புதுக்காட்டு நகர், பரந்தன், கிளிநொச்சி வழித்தடத்தில் 01.06.2003 ஆம் நாளிலிருந்து பின்வரும் நேர ஒழுங்கில் நடைபெறும் என்பதை பொதுமக்களுக்கு மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

நேர ஒழுங்கு

ஆழியவளை - கிளிநொச்சி

| ஆழியவளை | வேம்படி | தாளையடி | மருதங்கேணி | மாசார் | புதுக்காட்டுநகர் | பரந்தன் | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|---|---|
| காலை 07.00 | 07.15 | 07.30 | 07.40 | 07.50 | 08.00 | 08.45 | 09.00 |

கிளிநொச்சி - ஆழியவளை

| கிளிநொச்சி | பரந்தன் | புதுக்காட்டுநகர் | மாசார் | மருதங்கேணி | தாளையடி | வேம்படி | ஆழியவளை |
|---|---|---|---|---|---|---|---|
| பகல் 03.45 | 04.00 | 04.45 | 04.55 | 05.05 | 05.15 | 05.30 | 05.45 |

முகாமையாளர்,
பயணியர் போக்குவரவு ஊர்தி, வழியனுமதிப் பணியகம்.

(சி-3128)



## சிந்தனைக்கு

இலங்கையில் வழக்கில் உள்ள அரசியல் அமைப்பு எப்போதுமே பெரும்பான்மையினரின் ஆதிக்கத்தையே சிறுபான்மையினர் மீது திணித்து வந்திருக்கின்றது.

- தமிழீழத் தேசியத் தலைவர்.

ஈழநாதம்
EELANATHAM மக்கள் நாளிதழ்
யாழ். சாலை, கிளிநொச்சி. 29-05-2003

## இதுவே சாத்தியமற்றதெனின்...!

இடைக்கால நிர்வாக சபை விடயத்தில் விடுதலைப்புலிகளுடன் இணக்கப்பாடு ஒன்றிற்கு அரசாங்கம் வரத்தவறும் பட்சத்தில் அரசாங்கத்திற்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையிலான உறவில் விரிசல் அதிகரிப்பதோடு, சமாதானப் பேச்சுவார்த்தைகளை அது பாதிப்பதாக இருக்கும் என எதிர்பார்ப்பது தவறாகமாட்டாது.

விடுதலைப்புலிகளின் இடைக்கால நிர்வாக சபைக் கோரிக்கையினை ஐ.தே.முன்னணி அரசாங்கம் மீது அழுத்தத்தைப் பிரயோகிக்கும் நோக்கில் கொண்டுவரப்பட்ட தொன்றல்ல. வடக்கு - கிழக்குப் புனரமைப்பில் விடுதலைப்புலிகளின் பங்கேற்பை உறுதி செய்யும் நோக்கில் முன்வைக்கப்பட்டதொன்றாகும்.

ஆனால், இடைக்கால நிர்வாக சபை குறித்து அரசாங்கம் உறுதியான பதில் ஒன்று அளிக்கும் பட்சத்திலேயே அடுத்த சுற்றுப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பது குறித்தும், உதவி வழங்கும் டோக்கியோ மாநாட்டில் விடுதலைப்புலிகள் இயக்கம் பங்கேற்கும் என்பது குறித்தும் தீர்மானிக்கப்படும். ஏற்கனவே அறிவிப்புச் செய்யப்பட்டிருந்தது. இந்நிலையில், ஏழாவது சுற்றுப் பேச்சுவார்த்தைக்கென நிர்ணயிக்கப்பட்ட திகதி கடந்துவிட்ட நிலையில் - டோக்கியோ மாநாடு நடைபெறுவதற்கு இன்னமும் ஒரு வாரமளவிலேயே உள்ளது.

இந்நிலையில் டோக்கியோ மாநாட்டிலும் விடுதலைப்புலிகள் கலந்து கொள்ளாததொரு நிலை உருவாகுமானால், அது சிறிலங்கா அரசாங்கத்திற்கும் - விடுதலைப்புலிகளுக்கும் இடையிலான உறவில் பாதிப்பை ஏற்படுத்தும் என்றே துணிந்து கூறமுடியும். ஏனெனில் இடைக்கால நிர்வாக சபை ஒன்றை ஏற்படுத்தி - சமாதானப் பேச்சுவார்த்தைகளை முன்னெடுக்க முடியாத அரசாங்கத்தினால் இனப்பிரச்சினை குறித்த கடுமையான தீர்மானங்களை எவ்வாறு முன்னெடுக்க முடியும்?

மேலும், ஏற்கனவே சமாதானப் பேச்சுவார்த்தைகள் இடைநிறுத்தப்பட்டு முட்டுக்கட்டைகளை எதிர்நோக்கியுள்ள நிலையில், அரசாங்கம் சாதகமான பதில் அளிக்கப்படாதுபோனால், சமாதானப் பேச்சுக்களை மீண்டும் தொடர்வதற்கான இணக்கப்பாடு ஒன்று ஏற்படுவதென்பது சிரமமிக்கதொன்றாகவே இருக்கும். வேறுவிதமாகக் கூறினால் சமாதானப் பேச்சுவார்த்தை மீது நம்பிக்கை வளர்த்தெடுத்தல் என்பது கடினமிக்கதொன்றாகவே இருக்கும்.

ஏனெனில், இடைக்கால நிர்வாக சபை ஒன்றினை அமைப்பதற்கு எத்தகைய காரணத்தினை அரசாங்கத்தரப்புக் கூறிக் கொண்டாலும், இனப்பிரச்சினைக்கான தீர்வு விடயத்தில் இது ஒரு முன்னோடி நடவடிக்கையே. இனப்பிரச்சினைத் தீர்விற்கு இதனைவிட பல தடைகளையும், இடையூறுகளையும் தாண்டிச் செல்ல வேண்டிய அவசியம் ஆட்சியாளர்களுக்கு உண்டு. ஆனால், இத்தனைக்கும் தென்னிலங்கை அரசியல் சூழ்நிலையில் பெருமாற்றம் எதுவும் ஏற்படுவதற்கான வாய்ப்புக்கள் குறைவாகவே உண்டு. அதாவது ஆட்சியாளர்கள் இதனைவிட அரசியல் பலம் பெறுதல் என்பதற்கான சாத்தியப்பாடுகள் குறைவே ஆகும்.

பெரும்பாலும் விடுதலைப்புலிகள் முன்வைத்த இடைக்கால நிர்வாக சபை கோரிக்கையினை அரசாங்கம் அது அரசியல் யாப்பிற்கு விரோதமானது என்று கூறியே நிராகரிப்பதற்கான வாய்ப்புக்கள் உண்டு. அரசாங்கத்தரப்பு இதனை ஓரளவு ஊர்ஜிதம் செய்ததாகவே உள்ளது. இதனை அடிப்படையாகக் கொண்டே புலிகளின் கோரிக்கை அரசியல் யாப்பிற்கு உட்பட்ட விதத்தில் இருப்பின் அதனை நிறைவேற்ற அரசாங்கம் தயாராகவுள்ளது என்ற அரச தரப்பின் அறிவிப்புக்கள் உள்ளன.

ஆனால், அரசாங்கத்தின் இத்தகையதொரு நிலைப்பாடானது சமாதானப் பேச்சுவார்த்தை தொடர்பான நம்பகத் தன்மையைக் கேள்விக்குள்ளாக்கக்கூடியது. ஏனெனில், அரசாங்கத் தரப்பால் இத்தகையதொரு இடைக்கால நிர்வாக சபை வழங்கமுடியாது போயின் எவ்வாறு சமஷ்டி முறை போன்ற அரசியல் யாப்பு மாற்றத்தினை அரசாங்கத்தால் மேற்கொள்ளமுடியும். சமஷ்டி முறையை அரசியல் யாப்பிற்கு உட்பட்ட விதத்தில் பரிசீலிக்க முடியுமா?

ஆகையினால், விடுதலைப்புலிகள் முன்வைத்துள்ள இடைக்கால நிர்வாகம் தொடர்பான கோரிக்கையானது ஒரு பரீட்சார்த்தமான நடவடிக்கையை போன்றது என்றுகூடக் கூறலாம். அதாவது பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அரசாங்கம் இடைக்கால நிர்வாக சபை ஒன்றை உருவாக்க பலம் இன்றியோ அன்றி விருப்பம் இன்றியோ இருப்பின் அடுத்த கட்ட நடவடிக்கைகளுக்கென இவர்கள் மீது எவ்வாறு நம்பிக்கை வைக்க முடியும்.

சிறிலங்கா ஆட்சியாளர்கள் தமது அதிகாரத்தைத் தக்க வைத்துக் கொள்வதற்கும் - ஆட்சியைக் கைப்பற்ற முற்பட்டு நிற்பவர்கள் அரசாங்கத்திற்கு எதிராக நடவடிக்கைக்கு அரசியல் யாப்பையே ஒரு சாட்டாக்கிக் கொள்ள முற்பட்டு நிற்கின்றனர். இதேவேளை சிறிலங்கா அரசியல் யாப்போ பௌத்த சிங்களவர்களின் ஆதிக்கத்தை நிலை நிறுத்தும் நோக்கில் உருவாக்கப்பட்ட தொன்றாகும். இந்நிலையில், சிறிலங்காவின் அரசியல் யாப்பிற்கு உட்பட்டதாக இனப்பிரச்சினைத் தீர்விற்கான முயற்சிகள் சிந்திக்கப்படுமானால் அது வெற்றி பெறுவதென்பது சாத்தியப்பாடற்றதொன்றாகவே இருக்கும்.

# சமாதானம் ஏற்படுமென கூறிக்கொள்வதால் நான் பொறுமையைக் கடைப்பிடிக்கின்றேன்

### - சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க

(கொழும்பு)

சிறிலங்கா அரசாங்கம் கடைப்பிடிக்கும் ஊடக சுதந்திரம் பற்றி சனாதிபதி சந்திரிகா காட்டமாக விமர்சித்துள்ளார்.

கடந்த திங்களன்று சனாதிபதி மாளிகையில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் தலைமை தாங்கி உரையாற்றும் போதே சனாதிபதி இந்த விமர்சனத்தை வெளியிட்டுள்ளார்.

அரசாங்கத்தின் ஊடக சுதந்திரம் பற்றி புதிதாக எதனையும் நான் கூறத் தேவையில்லை. அரச தலைவியை ஊடகங்களுடாக விமர்சிக்கின்றனர்.

சமாதானம் ஒன்று ஏற்படும் என்று கூறிக் கொள்வதாலேயே பொறுமையாக இருக்கின்றேன். இவர்களுக்கு அச்சப்பட்டு அதிகாரத்தைப் பயன்படுத்த பின் நிற்கமாட்டேன். இருந்தாலும் தொடர்ந்தும் பொறுமையுடன் இருக்க முடியாது என்பதையும் இவர்கள் அறிந்து தான் வைத்திருக்க வேண்டும் என சனாதிபதி மேலும் கூறியுள்ளார்.

# மண்சரிவினால் புதையுண்ட 69 பேரின் சடலங்களை மீட்கும் பணி கைவிடப்பட்டது!

### -நடவடிக்கை தொடர்ந்தால் மீண்டும் மண்சரிவு

மண்சரிவினால் உயிருடன் புதையுண்ட 69 பேரின் உடல்கள் கைவிடப்பட்டுள்ளன. மீட்பு வேலை தொடங்கினால் மீண்டும் மண்சரிவு ஏற்படும் அபாயம் தோன்றியுள்ளதாக அறிவிக்கப்படுகின்றது.



தென்னிலங்கையில் மாலாபெ என்ற இடத்தில் வெள்ள நீரில் நீந்தும் சிறுவர்களும் வாகனம் ஒன்றின் இயந்திரத்தை இயங்க வைக்க முயலும் ஒருவரையும் காணலாம்.

வெள்ளத்தாலும் மண்சரிவினாலும் இரத்தினபுரி மாவட்டத்தில் உயிருடன் புதையுண்ட 69 பேரின் சடலங்களை மீட்க முடியாத நிலையிலுள்ளதாகக் கூறப்படுகிறது.

இம் மீட்புப் பணிகள் மேற்கொள்ளப்படுமிடத்து மீண்டும் மண்சரிவு ஏற்படும் நிலை இருப்பதாக மாவட்ட அரச அதிபர் அறிவிக்கிறார்.

தற்போது வெள்ள நிலைமை சீரான நிலைக்கு வந்துள்ள நிலையில் கொடிய தொற்று நோய் பரவும் அபாயம் தோன்றியுள்ளதாகவும் இவற்றை சமாளிக்க நடவடிக்கை எடுக்கப்படுவதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# ரசிகர்கள் காட்டுமிராண்டித்தனம் யாழ். இல் மத்தியஸ்தர் படுகாயம்

உதைபந்தாட்ட மத்தியஸ்தர் ஒருவர் தாக்கப்பட்டு படுகாயமடைந்த சம்பவம் ஒன்று யாழ். துரையப்பா விளையாட்டரங்கில் நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது. இதுபற்றி தெரிய வருவதாவது;

யாழ்.சென் நீக்கிலஸ் விளையாட்டுக் கழகத்திற்கும் பாடுமீன் விளையாட்டுக்கழகத்திற்கும் இடையில் உதைபந்தாட்டப் போட்டி ஒன்று நடைபெற்றுள்ளது. இதன்போது சென் நீக்கிலஸ் அணி ஒரு கோலைப் போட்டு முன்னணியில் திகழ்ந்த போது பாடுமீன் அணி வீரர் ஒருவர் முறைகேடாக விளையாடியதற்காக நடுவரால் சிவப்பு அட்டை காட்டப்பட்டு வெளியே செல்ல பணிக்கப்பட்டார்.

இதனால் ஆத்திரமுற்ற சகவீரர் ஒருவர் நடுவரைத் தாக்க முற்படுகையில் நடுவர் பாதுகாப்புத் தேடி ஓடியுள்ளார். அங்கு நின்ற மற்றுமோர் குழுவினால் அவர் கடுமையாகத் தாக்கப்பட்டார். இதனால் படுகாயமுற்ற நடுவர் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச் சம்பவத்தில் ஜேக்கப் யூட்சன் (வயது-29) என்பவரே தாக்கப்பட்டவராவார்.

## 10 ஆண்டுகள் பூர்த்தி

கால்பந்தாட்ட உலகில் பத்து ஆண்டுகளை நிறைவு செய்துவிட்ட நிலையில் இன்னும் நீண்டகாலம் விளையாடுவேன் என றொனால்டோ தெரிவித்துள்ளார்.

பிரேசிலைச் சேர்ந்த பிரபல கால்பந்து வீரரான றொனால்டோ தொழில்சார் வீரராக 10 வருடங்களை நிறைவு செய்துவிட்டார். 1993 ஆம் ஆண்டு மே மாதம் 25 ஆம் திகதி தனது கால்பந்து வாழ்வை றொனால்டோ துவக் கினார்.

தற்போது ரியல் மட்ரிட் கழகத்திற்காக விளையாடிவரும் றொனால்டோ 1996 இல் பார்சிலோனா கழகத்திற்காக விளையாடி 39 கோல்களைப் போட்டுள்ளார். அதன் பின்னர் இத்தாலியின் இன்டர்மிலான் கழகத்துக்கு றொனால்டோ மாறினார்.

10 ஆண்டு கால கால்பந்து விளையாட்டுக்குறித்து றொனால்டோ கூறும்போது;

என்னுடைய 16 வயதில் நான் முதன் முதலாக சர்வதேச அறிமுகத்தை ஆரம்பித்தமையை நினைத்துப் பார்க்கும்போது மிகவும் பெருமையாகவுள்ளது எனவும் இதற்கு காரணமாக இருந்து அனைவருக்கும் நன்றி தெரிவிப்பதாகவும் கூறினார்.

# பிரான்ஸ் பகிரங்க டென்னிஸில் 2-வது சுற்றுக்கு முன்னேறிய வீரர்கள்

பிரான்ஸ் பகிரங்க டென்னிஸ் போட்டியின் இரண்டாவது சுற்றுக்கு முன்னணி வீராங்கனைகளான லின்சட் டெவன்போட், ஜெலீனா டோகிட் ஆகியோர் முன்னேறியுள்ளனர்.

நேற்று முன்தினம் இரவு நடந்த ஆட்டத்தில் அமெரிக்காவின் முன்னணி வீராங்கனையான லின்சட் டெவன்போட் தன்னை எதிர்த்து களமிறங்கிய டெய்ன் ரகிஷியாவை 6:2, 6:0 செட் கணக்கில் தோற்கடித்தார்.

யூகோஸலாவாக்கியாவைச் சேர்ந்த 10 ஆம் நிலை வீராங்கனையான ஜெலீனா டோகிட் 6:4, 6:4 எனும் நேர் செட் கணக்கில் ஜேர்மனியின் ஜேஞ்சலிகாவை தோற்கடித்தார்.

ஆடவர் ஒற்றையர் பிரிவில் முன்னணி வீரர் ஹெவிட் இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

ஆடவர் ஒற்றையர் பிரிவின் நேற்று நடைபெற்ற முதல் சுற்று ஆட்டம் ஒன்றில் அவுஸ்திரேலியாவின் முன்னணி வீரர் ஹெவிட்டும் உலகின் 76 ஆவது நிலை வீரரான அமெரிக்காவின் பிறையன் வகாலியும் மோதினர்.

மொத்தம் மூன்று மணிநேரம் விறுவிறுப்பாகப் போட்டி நடைபெற்றது. இதனால் 6:4, 6:1, 6:7, 6:3 என்ற செட் கணக்கில் ஹெவிட் வெற்றி பெற்று இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

இதனைத் தொடர்ந்து இரண்டாவது சுற்றில் ஹெவிட் ரஷ்யாவின் நிக்கோலஸ் பிங்கோவுடன் மோதவுள்ளார்.




# கட்டைபறிச்சானில் தளபதி கேணல் பதுமன் திருமலை மாவட்ட இராணுவத் தளபதி சந்திப்பு!

## மாவட்டத்தின் பல்வேறு நிலைமைகள் குறித்து ஆராய்வு

(திருகோணமலை)

தமிழீழ விடுதலைப்புலிகளின் திருகோணமலை மாவட்ட சிறப்புத் தளபதி கேணல் பதுமன் உள்ளிட்ட புலிகள் குழுவினருக்கும் திருகோண



மலை மாவட்ட சிறிலங்கா இராணுவத்தளபதி பிரிகேடியர் செனவீர உள்ளிட்ட குழுவினருக்கும் இடையில் நேற்று மாலை 4.00 மணிக்கு சந்திப்பொன்று இடம்பெற்றது.

திருகோணமலையின் மூதூர் பகுதியில் உள்ள கட்டைபறிச்சான் சூனியப் பிரதேசத்தில் இடம்பெற்ற இச்சந்திப்பில் விடுதலைப்புலிகளின் தரப்பில் திருமலை மாவட்ட சிறப்புத் தளபதி கேணல் பதுமன், திருகோணமலை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் திலக், தளபதிகளான உதயன், விமலன் மற்றும் விடுதலைப்புலிகளின் சமாதான செயலகத்தைச் சேர்ந்த பவானந்தன் ஆகியோரும் சிறிலங்கா அரச படையினரின் தரப்பில் திருமலை மாவட்டக் கட்டளைத் தளபதி பிரிகேடியர் செனவீர மற்றும் பிரிகேடியர் அப்துல் சகீா ஆகியோர் பங்குகொண்டனர். இச்சந்திப்னை திருகோணமலை மாவட்ட போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவர் ஜான் தலைமைதாங்கி நடத்தியிருந்தார்.

சுமார் 45 நிமிடங்களாக இடம்பெற்ற இச்சந்திப்பில், போர் நிறுத்த உடன்படிக்கையில் குறிப்பிடப்பிட்ட சரத்துக்கள் தொடர்பாக திருகோணமலை மாவட்டத்தில் நடைமுறைப் படுத்தப்படவேண்டிய விடயங்கள், மாவட்டத்தில் இருதரப்பினருக்குமிடையில் விரைவான தொடர்பாடலை ஏற்படுத்தல், எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய பிரச்சினைகளை எவ்வாறு தீர்த்தல் மற்றும் அண்மையில் மூதூர் பகுதியில் தமிழ் மற்றும் முஸ்லீம் சமூகத்தினருக்கேற்பட்ட குழம்பநிலையை முற்றாக நீக்கி மக்களின் இயல்பு வாழ்வை உறுதிப்படுத்திக்கொள்வதற்கான நடவடிக்கைகள் என்பன தொடர்பாக இரு தரப்பினரும் ஆராய்ந்தனர். இரு தரப்பினருக்கும் இடையேயான தொடர்பாடலை ஏற்படுத்துவதன் மூலம் பிரச்சினைகளை சுமுகமாகத் தீர்ப்பதுடன் இருதரப்பினருக்கும் இடையில் ஏற்படக்கூடிய தவறான புரிந்துணர்வைத் தவிர்த்து நம்பிக்கையைக் கட்டியெழுப்பலாம் என்ற கருத்து இரு தரப்பிரனாலும் முன்வைக்கப் பட்டது.

போர் நிறுத்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட 15 மாதங்கள் கடந்துவிட்ட இந்நிலையில் திருகோணமலை மாவட்டத்தின் விடுதலைப் புலிகளின் மற்றும் இராணுவத் தலைவர்களுக்கிடையில் இடம்பெற்ற முதலாவது சந்திப்பு இதுவென்பது குறிப்பிட்டத்தக்கது. இவ்வாறன ஒரு சந்திப்புக்கான தேவையேற்படும் போது இருதரப்பினரும் எதிர்காலத்தில் இவ்வகையான சந்திப்புக்களை மேற்கொள்ள இணங்கிக்கொண்டனர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

# இரத்தினபுரி மக்களுக்கு மட்டு. மக்கள் உதவி!

(மட்டக்களப்பு)

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட இரத்தினபுரி மாவட்ட மக்களுக்கு மட்டக்களப்பு மாவட்ட மக்கள் நான்கு இலட்சம் ரூபா பெறுமதியான பொருட்களை நேற்று அனுப்பி வைத்துள்ளனர்.

மூன்று பாரஊர்திகளில் அனுப்பி வைக்கப்பட்டிருந்த இந்தப் பொருட்கள் நேற்று இரத்தினபுரி மாவட்ட அரசாங்க அதிபரிடம் கையளிக்கப்பட்டது.

# புலம் பெயர்வாழ்வும் வெளிப்பாடுகளும் கருத்தமர்வும் கலந்துரையாடலும்

கிளிநொச்சி அழகியல் கலாமன்றத்தில் இன்று பிற்பகல் 3.30 மணிக்கு 'புலம்பெயர் வாழ்வும் வெளிப்பாடுகளும்' என்ற பொருளில் புகலிடத்திலருந்து (பிரான்ஸி லிருந்து) வருகைதந்திருக்கும் கவிஞர் கி.பி.அரவிந்தன் (கிறிஸ்தோபர் பிரான்ஸிஸ் சுந்தர்) உரையாற்றுகின்றார்.

புகலிட வாழ்வின் பிரச்சினைகள் புகலிடச் சமூக நிலைமைகள் புகலிடத்தமிழர்களின் எதிர்காலம் குறித்த கருத்துக்கள் முன்வைக்கப்படவுள்ளன. கருத்தமர்வின் பின் விரிவான கலந்துரையாடலும் இடம்பெறும். கி.பி.அரவிந்தன் முகம் கொள், இனியொருவைகறை, கனவின் மீது ஆகிய கவிதைத் தொகுதிகளை வெளியிட்டவர். 'அப்பால் தமிழ்' என்ற இணையத் தளத்தையும் நடத்திவருகின்றார். அனைவரையும் இந்நிகழ்வில் கலந்துகொள்ளும்படி நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர்கள் கேட்கின்றனர்.

# சுற்றாடல் மாசடைதலால் ஆஸ்மா நோய் அதிகரிப்பு

வாகன நெரிசல் காரணமாக ஏற்படும் சுற்றாடல் மாசடைதலால் சிறுவர்கள் மத்தியில் ஆஸ்மா போன்ற நோய்கள் அதிகரித்திருப்பதாக விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.

தாய்வானிலும், ஜேர்மனியிலும் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள் இதனை உறுதிப்படுத்தியுள்ளன.

வாகன நெருக்கடி அதிகமாக உள்ள பிரதேசங்களை அண்மித்த பாடசாலை சிறுவர்கள் சோதனைக்குட்படுத்தப்பட்டுள்ளார்கள்.

இதன்போதே இந்த உண்மை கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

- அபிவிருத்தி லொத்தர் சபை விவகாரம் -

# ஊடக அமைச்சர் உத்தரவை மீளப்பெறுதல் வேண்டும்

## - சனாதிபதி சந்திரிகா கோரிக்கை

(கொழும்பு)

அபிவிருத்தி லொத்தர்சபை விவகாரம் தொடர்பாக ஊடக அமைச்சர் பிறப்பித்த உத்தரவை அவர் மீளப்பெறவேண்டும் என்று சனாதிபதி சந்திரிகா கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பாக சனாதிபதி சிறிலங்கா பிரதமருக்கு கடிதம் ஒன்றை அனுப்பிவைத்துள்ளார்.

அரசியல் அமைப்பு சட்டத்தின் கீழ் தனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு அபிவிருத்தி லொத்தர் சபை தொடர்பான பிரகடனத்தைத் தான் விடுத்ததாக தனது கடிதத்தில் தெரிவித்திருக்கும் சனாதிபதி ஊடக அமைச்சரின் முரண்பாடான உத்தரவு காரணமாக அந்தப் பிரகடனத்தை அச்சிட்டு வெளியிட முடியவில்லை என்று தெரிவித்திருக்கிறார். எனவே ஊடக அமைச்சர் பிறப்பித்த உத்தரவை மீளப் பெறவேண்டும் என்றும் தவறினால் அந்த அமைச்சர் மீது தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் சனாதிபதி எச்சரித்துள்ளார்.

இதேவேளை அபிவிருத்தி லொத்தர் சபையில் எவருக்கும் நியமனங்கள் வழங்க வேண்டாம் என்று அந்த சபையின் தலைவருக்கு சனாதிபதி கடிதம் அனுப்பி வைத்துள்ளார்.

அத்துடன் புதிய ஒப்பந்தங்கள் செய்யும் முன்னர் அது தொடர்பான ஆவணங்களை தனக்கு அனுப்பி வைக்குமாறும் அவர் கேட்டுள்ளார்.

அபிவிருத்தி லொத்தர் சபையில் ஏற்படும் மீள் செலவீனங்களைத் தவிர ஏனைய செலவீனங்களை நேற்று முதல் நிறுத்தவேண்டும் எனவும் அவர் உத்தரவு பிறப்பித்துள்ளார்.

# சு.கட்சி–ஜே.வி.பி.பேச்சுவார்த்தை பொ.ஐ.மு. பொதுக்குழு ஆய்வு!

(கொழும்பு)

சிறிலங்கா சுதந்திரக்கட்சிக்கும் ஜே.வி.பி.க்கும் இடையே இடம்பெற்றுவருகின்ற பேச்சுவார்த்தை குறித்து பொதுசன ஐக்கிய முன்னணியின் பொதுக்குழு ஆராயவுள்ளது.

பொதுசன ஐக்கிய முன்னணியின் பொதுக்கூட்டம் நாளை மறுதினம் சிறிலங்கா சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தலைமையில் இடம்பெறவுள்ளது.

இக்கூட்டத்திலேயே இது தொடர்பாக ஆராயப்படவுள்ளது.

### முரண்பாட்டை...

பிடிக்க வேண்டும் என்றும் டோக்கியோ மாநாட்டின் கூட்டு அனுசரணையாளர் என்ற வகையில் விடுதலைப்புலிகள் மற்றும் சிறிலங்கா அரசாங்கம் ஆகிய இரண்டு தரப்பினரும் அந்த மாநாட்டில் கலந்து கொண்டு வரலாற்றுச் சிறப்புமிக்க வாய்ப்பை பயன்படுத்திக்கொள்ள வேண்டும் எனக் குறிப்பிட்ட அறிக்கையில் கேட்கப்பட்டுள்ளது.

### எரிக்-கொக்கல...

இதேவேளை, போர் நிறுத்தக் கண்காணிப்புக் கடமைகளில் ஈடுபடுவதற்கென்று சுவீடன், டென்மார்க், பின்லாந்து ஆகிய நாடுகளைச் சேர்ந்த மேலும் ஒன்பது கண்காணிப்பாளர்கள் அடுத்த மாதம் சிறிலங்கா வரவுள்ளனர்.

### கூட்டுத்தலைமை...

தங்களின் கோரிக்கை குறித்து பிரதமர் தரும் பதிலில் தான் தங்கியுள்ளது என்று கூறியுள்ளனர்.

இந்நிலையில் டோக்கியோ மாநாட்டில் விடுதலைப் புலிகள் இயக்கம் கலந்து கொள்வதற்குரிய அரசியல் சூழ்நிலை ஏற்படாத விடத்து சமாதானப் பேச்சுவார்த்தை நடைமுறைகளில் அனுசரணையாளராகப் பங்குபற்றிக் கொண்டு டோக்கியோ மாநாட்டுக்கு கூட்டுத் தலைமை வகிப்பது முடியாத காரியம் என்று நோர்வே அரசு வட்டாரங்கள் கருதுவதாகக் கொழும்பு இராஜதந்திர வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

# பயங்கரவாதத்திற்கெதிரான அமெ. போர் உலகை ஆபத்தான இடமாக்கியுள்ளது

## - சர்வதேச மன்னிப்புச் சபை தெரிவிப்பு

மனித உரிமைக் குழுவான அனைத்துலக மன்னிப்புச் சபை அமெரிக்கா தலைமையில் நடைபெற்ற பயங்கரவாதத்திற்கு எதிரான போர் உலகை மேலும் ஓர் ஆபத்தான இடமாக்கி இருக்கின்றது என்று கூறியுள்ளது.

அந்த அமைப்பு வெளியிட்டிருக்கும் ஆண்டறிக்கை பனிப்போர் முடிந்ததற்கு பிறகு உலக மக்கள் இப்பொழுது முன்னர் எப்போதையும்விட மிகவும் பாதுகாப்பற்ற சூழ்நிலையை எதிர் நோக்கிவிட்டுள்ளார்கள் என்று தெரிவிக்கின்றது.

செப்ரம்பர் 11ஆம் திகதி அமெரிக்கா மீது நடத்தப்பட்ட தாக்குதல்கள் மேற்குலக அரசுகளுக்கு அடிப்படை மனித உரிமைகளையே மறுக்கின்ற சட்டத்தை நடைமுறைப்படுத்துகின்ற நிலைக்கு கொண்டு சென்றுள்ளது என்று அனைத்துலக மன்னிப்புச் சபையின் பொதுச் செயலாளர் ஜரின்ஹான் தெரிவித்தார்.

அத்துடன் இது மற்றைய நாடுகளின் அரசுகள் தங்களுடைய வழமையான அடக்கு முறைகளை அதிகப்படுத்துவதற்கு உதவி இருக்கின்றது என்றும் தெரிவித்தார்.

### அபிவிருத்தி...

ச்சர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

அபிவிருத்திக்கான அமைப்பொன்று இலங்கையின் சட்ட திட்டங்களுக்கு அமைவான முறையில் சகல இன மக்களின் உரிமைகளைப் பலப்படுத்தும் வகையில் சகலருக்கும் நியாயம் கிடைக்கும் வகையில் ஏற்படுத்தப்படும்.

அடுத்தமாதம் ஜப்பானில் நடைபெறவிருக்கும் உதவி வழங்கும் மாநாட்டில் 35 நாடுகளும் 20 சர்வதேச ஸ்தாபனங்களும் பங்குபற்றியுள்ளன. அத்துடன் இலங்கையில் முதலீட்டு வாய்ப்புக்களை ஏற்படுத்துவதுபற்றி ஜப்பானிய வர்த்தகர்களுடன் பேச்சுவார்தை நடத்த அரசாங்கம் உத்தேசித்துள்ளது எனத் தெரிவித்துள்ள அமைச்சர் வெறுப்புணர்ச்சி மிக்க அரசியல் கலாசாரத்தை மாற்றி சுமுகமான முறையில் செயற்படுவதற்கான வேலைத்திட்டமொன்றை அரசாங்கம் ஆரம்பித்துள்ளது.

இதன் ஒரு அங்கமாக பாராளுமன்ற கண்காணிப்புக்குழுக்களின் தலைமைப்பதவியை எதிர்க்கட்சி அங்கத்தவர்களுக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது என்று மேலும் தெரிவித்துள்ளார்.

### புலிகளிடம்...

னச் செயலக பணிப்பாளர் புலித்தேவன் அவர்களிடம் கையளித்தனர்.

இது குறித்துக் கருத்துத் தெரிவித்த புலித்தேவன் அவர்கள் எம்முடைய அமைப்பின் தலைமைப் பீடம் சட்டவல்லுனருடன் இது குறித்து கலந்தாலோசித்து பதில் கூறும் என்று தெரிவித்துள்ளார்.

பிற்பகல் 3.20 மணிக்கு உலங்கு வானூர்தி மூலம் மேற்படிக் குழுவினார் கொழும்பு திரும்பினர். (சோ,பா)

### உலக சூழல்...

நடத்தப்படவுள்ளன. அத்துடன் உள்ளூர் மற்றும் சர்வதேச நிறுவனங்களூடாக சூழல் பாதுகாப்புத் தொடர்பான விழிப்புணர்வுப் பிரசுரங்களை வெளியிடுதல், முக்கிய இடங்களில் மர நடுகைகள் அத்துடன் பொது இடங்களிலுள்ள கழிவுப் பொருட்களை அகற்றுதல் என பல்வேறு நிகழ்வுகள் சூழல் நாளினை ஒட்டி நடைபெறவுள்ளன.

இதேவேளை. உலக சூழல் நாளினை. எதிர்கொள்ளும் வகையில் கிளிநொச்சி மத்திய கல்லூரி மாணவர்கள் நேற்று சூழல் பேணும் நடவடிக்கையில் ஈடுபட்டனர். தமது கல்லூரிச் சூழலில் காணப்படும் கழிவுகளை அகற்றும் பணியில் ஆசிரியர்கள், மாணவர்கள் ஈடுபட்டதை நேற்றுக் காண முடிந்தது.

சத்ஜெய படை நடவடிக்கை மூலம் கிளிநொச்சியை ஆக்கிரமித்த சிறிலங்கா படையினர் கிளிநொச்சி மத்திய கல்லூரியை சிதைத்துள்ளதுடன் தமது முன்னணி அரணாக கல்லூரியைப் பயன்படுத்திக் கொண்டிருந்தது தெரிந்ததே.

### அமெரி.தூதரக...

யம் மற்றும் விடுதலைப்புலிகளின் நடவடிக்கைகள் உட்பட பல்வேறு விடயங்கள் குறித்து சிவில் அதிகாரிகள் அரசியல் பிரமுகர்கள் சர்வதேச தொண்டர் அமைப்புக்களின் பிரதிநிதிகள் மற்றும் படை அதிகாரிகள் உட்பட சம்பந்தப்பட்டவர்களுடன் கலந்துரையாடி விபரங்களைக் கேட்டறிந்துள்ளார்.

குறிப்பாக யாழ். அரச அதிபர் பத்மநாதனுடன் இடம்பெற்ற சந்திப்பில் இயல்பு நிலை, உயர் பாதுகாப்பு வலயத்தில் மீள்குடியேற்றம் தொடர்பாக ஆராயப்பட்ட போது குடாநாட்டில் பாதுகாப்பு வலயம் போன்ற காரணத்தினால் பல பகுதிகளில் மீள்குடியேற்றம் இல்லை இயல்புநிலையும் இதுவரை ஏற்படவில்லை என்று அரச அதிபர் விளக்கமளித்தார்.

இதுவரை 40.000 குடும்பங்கள் மீளக்குடியமர்த்தப்பட்டுள்ள போதிலும் 5000 குடும்பங்களுக்கு மட்டும் தான் மீளக்குடியமர்வு கொடுப்பனவு ரூபா 25,000 வழங்கப்பட்டுள்ளது என்பதையும் அரச அதிபர் சுட்டிக் காட்டினார்.

மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் என்.நடராசாவுடன் இடம் பெற்ற சந்திப்பின் போது எதிர்வரும் யூன் மாதம் நடைபெற இருக்கும் உள்ளூராட்சி சபைத் தேர்தல் குறித்து திருத்த ஏற்பாடு குறித்து கேட்டறிந்தார் 80 சதவீதமான ஏற்பாடுகள் ஏற்கனவே பூர்த்தியாகிவிட்டது என்றும் அரசாங்கம் அறிவித்தால் தேர்தல் நடத்தத் தான் தயார் என்றும் பதிலளித்தார் உதவித் தேர்தல் ஆணையாளர்.

இந்தச் சந்திப்பின் பின்னர் தென்மராட்சி, சரசாலைப் பகுதியில் அமெரிக்க கண்ணி வெடி அகற்றும் பிரிவினரின் செயற்பாடுகளையும் நேரிற் சென்று பார்வையிட்டனர்.

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2003ம் ஆண்டு மே மாதம் 29ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.